|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 14 விஸ்வாவஸு சித்திரை - வைகாசி மீ மே 2025 இதழ் 5



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## சித்திரை - வைகாசி

மலர் 14 மே 2025 இதழ் 5

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வாழ்வாங்கு வாழ்ந்தவர் | 8 |
| தெய்வத்தின் குரல் | 10 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 14 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 17 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 19 |
| ஸ்ரீ பாதஸப்தபதி | 20 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 24 |
| வேத ஸூக்தங்கள் | 25 |
| வைகாசி மாத விசேஷ தினங்கள் | 27 |
| விவேக சூடாமணி | 28 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 32 |
| சுகநாஸ உபதேசம் | 38 |
| ஆச்சார்ய பரம்பரை | 43 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 45 |
| ப்ரபோத சிந்தாமணி | 47 |
| மூக ஸாரம் | 48 |






भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்


## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


**கௌரவ தலைமை ஆசிரியர் :**

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

**ஆசிரியர் குழு :**

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



**வெளியிடுவோர் :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

**அலுவலக முகவரி :**

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

***ஆச்ரிததமார்த்தரம் மாமுபேக்ஷஸே கிமிதி சிவ ந கிம் தயஸே ।***
***ச்ரிததகோப்தாதீனார்தி ஹ்ருதி கலு ஸம்ஸந்தி ஜகதி ஸந்த்வஸ்தாம் ॥***

*ஹே பரமசிவா சரணமடைந்தவனும், மிகவும் பீடை அடைந்தவனுமான என்னை ஏன் உபேக்ஷை செய்கிறாய். ஏன் தயை செய்யவில்லை. சரணமடைந்தவர்களைக் காப்பவர், கஷ்டமடைந்தவர்களின் இன்னல்களைப் போக்குபவர் என்றல்லோ சாதுக்கள் உன்னை உலகில் கூறுகின்றனர்.*

***ப்ரஹஹரேதி வாதீ பனிதமதாக்ய இதி பாலிதோ பவதா***
***சிவ பாஹீதி வதோஅஹம் ச் ரிதோ ந கிம் த்வாம் கதம் ந பால்யஸே நச***

*ப்ரஹர, ஆஹர என்று சொல்பவன் கூட உனது நாமாவைக் கூறினவனாகிறான். உம்மால் காப்பாற்றப்பட்டுள்ளான். ஹே பரமசிவா என்னைக் காப்பாற்றும் என்று சொல்லி கொண்டு உம்மைச் சரணமடைந்த நான் எவ்விதம் உம்மால் ரக்ஷிக்கத் தகாதவனாவேன்.*

*[ஆ ஹர ப்ர ஹர இரண்டிலும் ஹர சப்தம் உள்ளது ]*

***சரணம் தவ சிவமார்திதஸ்ய தவ ஹரேதிதி ஸதாம் கிராஹம் த்வாம்***
***ஸரணம் கதோஸ்மி பாலய கலமபி தேஷ்வீச பக்ஷபாதான் மம ॥***

*பரமேஸ்வரனை சரணடை. அவர் உனது கஷ்டங்களை விலக்குவார் என்னும் சாதுக்களின் வார்த்தையினால் உம்மைச் சரணம் அடைந்திருக்கிறேன். நான் மிகுந்த பாபியானாலும் அந்த சாதுக்களிடம் உமக்குள்ள பக்ஷபாதத்தினாலாவது என்னை ரக்ஷிக்க வேண்டும்.*

*[ஸ்ரீதர அய்யாவாளின் ஆர்த்திஹர ஸ்தோத்ரம் 9]*

*த்ருசா த்ராகீயஸ்யா தரதலித நீளோத்பல ருசா*
*தவீயாம்ஸம் தீனம் ஸ்னபய க்ருபயா மாமபி ஸிவே*
*அனேனாயம் தன்யோ பவதி ந ச தே ஹானிரியதா*
*வனே வா ஹர்ம்யே வா ஸமகர நிபாதோ ஹிமகர: ॥*

*அன்னையே தாமரைப் பூவின் ஒளி நிரம்பியதும், நீண்ட கண்களின் பார்வையால் கோடியில் இருப்பவனும், தீனனான என்னையும் நீராட்டு. இதனால் உனக்கு என்ன ஹானி? இதனால் நானோ தன்யனாவேன். வனத்திலும், மாளிகையிலும் நிலவொளி ஸமமாகத்தானே விழுகிறது.*

*[ஸ்ரீ சங்கரர் - ஸௌந்தர்ய லஹரீ]*



## மகிழ்கிறோம்

விஸ்வாவஸு ஸூ சித்திரை மீ 17 உ புதன்கிழமை (30.4.2025)
அக்ஷய திருதியை அன்று **ஸ்ரீ விஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின்**
திருக்கரங்களால் அன்னவரம் **ஸ்ரீ கணேச சர்மாவிற்கு** சந்யாஸ தீக்ஷை
கொடுக்கப்பட்டு அவர் **சத்ய சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி**
என்ற திருநாமத்துடன் காஞ்சீ மடத்தின் 71 வது பீடாதிபதியானார்.
இரண்டு ஆச்சார்யார்களுக்கும் எங்களது வந்தனங்கள்.
இந்த வைபவத்தின் விவரங்களை விளக்கமாக
அடுத்த இதழில் தருகிறோம்.

# ஆசிரியர் பக்கம்

*ஞான ஆசிரியரான ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் ஜயந்தியின் பொருட்டு அவரது பாஷ்யத்திலிருந்து சில விஷயங்களைத் தருகிறோம். நமது ஆச்சார்யரே அனைவரும் உய்ய ஆசிரியர் பக்கத்தில் பேசுகிறார்.*

### பகவானின் அவதாரம்

*''ஞானம், ஐஸ்வர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ் என்பவற்றை எப்பொழுதும் உடைய அந்த பகவானானவர் முக்குண வடிவமும் விஷ்ணுவிற்கு உரியதுமான தன் மாயையாகிய மூலப்ரக்ருதியை வசப்படுத்திக் கொண்டு [உண்மையில்] பிறவாதவராய், அழிவற்றவராய், ப்ராணிகளுக்கு ஈஸ்வரராய், இயல்பாகவே நித்யராய், சுத்தராய், புத்தராய் [அறிந்தவர்], முக்தராயிருப்பினும் தன் மாயையினாலே உடம்போடு நிற்பவர் போலும் லோக அனுக்ரஹம் செய்பவராய் காணப்படுகிறார்.''*

*[ கீதா பாஷ்யம்]*

### மாயாவியின் செய்கை

*''முக்காலமும் மாயாவியின் கயிறு வித்தை அவனை பாதிப்பதில்லையோ [ஏனெனில் அது உண்மையில்லை] அதுபோல் இவ்வுலகத்தினால் பரமாத்மா பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில் இவ்வுலகம் ஒரு மாயை. கனவைப் பார்ப்பவன் கனவினால் பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில் இந்நிலை பார்ப்பவனுடைய விழிப்பு நிலையிலும், சுஷுப்தி நிலையிலும், பாதிப்பது இல்லை. ஒரே ஸாக்ஷி இந்த மூன்று நிலைகளையும் பார்த்துக் கொண்டுள்ளது. காக்ஷி மாயையாகியதால் ஸாக்ஷி கயிற்றில் வித்தைக் காட்டும் மாயாவி போல் பாதிக்கப்படுவதில்லை.''*

### மாயையின் சக்தி

*''ஆத்மா ஒன்றுதான் உள்ளது என்னும் போது பலவாறாகத் தோன்றும் இந்த உலகத்திற்கு என்ன பதில்? தோற்றத்திற்குக் காரணம் அந்த பரமாத்மாவின் மாயை சக்தி. ஒன்றுமில்லாத வானில் பெரிய மரத்தை தோற்றுவித்து அதிலிருந்து பழங்களையும், மலர்களையும் தோற்றுவித்தாலும் அதனால் தான் பாதிக்கப்படாத மாயாவி போல் ஆத்மா உள்ளது. மரமும், மலர்களும், பழங்களும் பொய்யானவை.*

*[மாண்டூக்ய காரிகை பாஷ்யம்]*

### *ஈஸ்வரன் பொது காரணம்*

*ஈஸ்வரன் மழை போல் பார்க்கப்பட வேண்டும். எப்படி நெல், கோதுமை இவைகளுக்கு மழை பொது காரணமாகிறதோ அந்த பீஜங்களின் வளர்ச்சி அந்தந்த பீஜங்களின் விசேஷ சக்தியாகிறதோ அதுபோல் மனிதன் தேவர் முதலிய ஜாதிகளின் பிறப்பிற்கு ஈஸ்வரன் பொதுக் காரணம் ஆவார். தேவ மனுஷ்யாதிகளின் பேதம் அவரவர் கர்ம வினைக்கு ஏற்ப ஏற்படும்.*

*[ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம்]*

### *ஆத்மா புறக்கணிக்கத்தக்கதல்ல*

*ஆத்மாவை மறுக்க முடியாது. யார் மறுக்கிறானோ அவனே ப்ரம்மமாகியுள்ளான்.*

*[ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம்]*

### *ஜீவாத்மா*

*உடலுக்கு அத்யக்ஷனாகி ப்ராணனுடையதாக உள்ள சேதனம் ஜீவாத்மா.*

### *ஜீவன் ப்ரம்மத்தினின்று வேறுபடாதவன்*

*ஜீவன் என்று சொல்லப்படுபவன் ப்ரம்மத்தினின்று முழுவதுமாக வேறுபடான். அவனே ப்ரம்மமாயினும் 'கர்தா' என்றும் 'போக்தா'' என்றும் 'உபாதி ' விசேஷத்தால் அறியப்படுகிறான்.*

### *பேதத்திற்குக் காரணம் அவித்யா*

*ப்ரம்மத்திற்கும், ஜீவனுக்கும் பேதத்தை நாம ரூபங்கள் உடைய உபாதிகளால் அவித்யை ஏற்படுத்துகிறது. இந்த பேதம் பரமார்த்திகமல்ல. வ்யவஹாரிகம் மட்டுமே.*

*[ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம்]*

### *ஜகமும் ஆத்மாவும் ஒன்றே*

*இந்த ஜகம் முழுவதும் ஆத்மாவே தான். அதைத் தவிர பிரிதொன்றுமில்லை. குடம் முதலிய வஸ்துக்கள் பல இருப்பினும் அவையாவும் மண்ணேதான். இதைப் போன்றே ஆத்ம ஞானி யாவற்றையும் தனது ஆத்மாவாகவே பார்க்கிறான்.*

*[ஆத்ம போதம்]*

### ஜீவன் முக்தன்

ஆத்ம ஞானியான ஜீவன் முக்தன் உபாதிகளுள்ளே இருந்தாலும் எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் ஒரு மூடனைப் போல் இருப்பான். எதிலும் பற்று இல்லாதவனாக காற்றைப் போல் உலவி வருவான்.

[ஆத்ம போதம்]

### சாந்தர்கள்

சாந்தர்களான மஹாந்தர்கள் வஸந்த காலத்தைப் போல் உலகிற்கு நன்மை செய்பவர்களாய் அச்சமூட்டும் பிறவிக் கடலை தாங்கள் தாண்டினவர்களாய் காரணமில்லாமல் மற்றவர்களையும் தாண்டுவிப்பவர்களாய் உலகில் ஜீவன் முக்தர்கள் வசிக்கிறார்கள்.

[விவேக சூடாமணி]

இவை ஆச்சார்யரின் பாஷ்யங்களிலிருந்து எடுத்த மாதிரிகள். தினமும் அவைகளை அனுசந்தானம் செய்வோம். ப்ரம்ம நிலைக்கு விழைவோம்.

ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர!

## வருந்துகிறோம்

ஸ்ரீஸ்ரீஸ்ரீ 3 பெரியவாளின் அன்புக்கும் பாத்திரமாக இருந்து ஸ்ரீ மடத்தின் பல நுணுக்கமான விஷயங்களை அறிந்தவருமான **ஸ்ரீ அருணாச்சல ஐயர்** அவர்கள் ஏப்ரல் 12 அன்று பெரியவர்களின் சரணத்தை அடைந்தார். அவரை அறிந்தவர்களுக்கு இது ஒரு துக்ககரமான விஷயம். மடத்தில் பல வருடங்களாக அவர் செய்த சேவை மிகவும் பாராட்டுக்குரியது. எளிமையானர், நேர்மையானவர், ஆசாரத்துடன் இருந்தவர் இப்போது நம்மிடையே இல்லை. அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.

# வாழ்வாங்கு வாழ்ந்தவர்

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்'**



என்ற குறளுக்கு ஏற்ப எளிமைக்கு எடுத்துக்காட்டாகவும், தொண்டிற்கு இலக்கணமாகவும், குரு பக்திக்குச் சான்றாகவும் நூறு ஆண்டுகள் வாழ்ந்து ஸ்ரீ மஹா பெரியவர்களின் திருவடிகளில் ஐக்கியமானார் ஸ்ரீமடத்தின் அத்யந்த பக்தரான **ஸ்ரீ எம். எஸ். அருணாச்சலம் ஐயர்.** அன்றைய ஒருங்கிணைந்த வடஆற்காடு மாவட்டம் மகேந்திரவாடி என்ற கிராமத்தில் பிறந்து, சென்னையில் மிக பிரபலமான புத்தக நிலையமான ஹிக்கின்பாதம்ஸில் பணியாற்றியவர். சென்னை மேற்கு மாம்பலத்தில் மிக பிரபலமான சுரபி பிரிண்டர்ஸ், பவானி புக் சென்டர் போன்ற நிறுவனங்களை துவங்கி நடத்தியதோடு அல்லாமல், 1994 ஆம் ஆண்டு ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் சதாப்தி மஹோத்ஸவத்தை ஒட்டி ஸ்ரீ சுரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸ் நிறுவி, அதன் மூலம் நமது சனாதன வைதீக மதத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சம்பிரதாயங்களை அனைவரும் தெரிந்து கொண்டு கடைபிடிக்க ஏதுவாக இராமாயணம், மகாபாரதம், சந்தியா வந்தனம், கல்கி புராணம், பகவத்கீதை, துளசி சரித்திரம், யஜுர் வேத, சாமவேத சம்பிரதாயங்கள் என்று சிறியதும் பெரியதுமாக ஸ்ரீவத்ச சோமதேவ சர்மா, சிமிழி சி. வி. இராதா கிருஷ்ண சாஸ்திரிகள் போன்ற தர்ம சாஸ்த்ர வல்லுநர்கள் இயற்றிய பத்தாயிரம் புத்தகங்களுக்கு மேல் வெளியிட்டார் ஸ்ரீ அருணாச்சலம்.

காஞ்சி மஹா ஸ்வாமிகளிடம் தீவிர பக்தி பூண்டு பலமுறை அவர் யாத்திரை மேற்கொண்ட இடங்களுக்கெல்லாம் சென்ற அவர் கும்பகோணம் மஹாமகத்தின் போது வெளியிட்ட மஹாமகம் என்ற நூலும், தலைசிறந்த வரலாற்று ஆசிரியரான ஸ்ரீ ஏ. குப்புசாமி அவர்கள் இயற்றிய மஹா பெரியவாளின் வாழ்க்கை வரலாறு என்ற நூலையும் முதலில் வெளியிட்ட பெருமைக்குரியவர் ஸ்ரீ அருணாச்சலம். சென்னை மேற்கு மாம்பலம் ஸ்ரீ பக்த சமாஜம் மற்றும் சங்கர மடத்துடன் தன்னை இணைத்துக்

கொண்டு சங்கர பாதுகா இலட்சார்ச்சனை, சமஷ்டி உபநயனம், சங்கர ஜெயந்தி உத்ஸவங்கள் நடத்துவதில் முக்கிய பங்கு வகித்தார். "**காமகோடி வாணி**" என்ற ஆங்கில இதழை பத்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நடத்தி வந்தார். பின்னர் புதுப்பெரியவரின் சமய மற்றும் சமுதாய பணிகளில் ஈர்க்கப்பட்ட அவர் ஸ்ரீமடத்தில் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டு அவரது ஆசியுடன் தமிழில் காமகோடி இதழை ஆரம்பித்து வெளியிட்டார்.

1956 களில் தனது 30 ஆவது வயதில் அத்வைத கிரந்த கோஷ் (டிக்சனரி) புத்தகங்களை ஸ்ரீ மஹா பெரியவர் ஆணைக்கிணங்க ஸ்ரீ மடத்தில் புத்தகம் கேட்டு எழுதிய நூற்றுக்கணக்கானோர் வீடுகளுக்கே சென்று கொடுத்து வந்தார். தூக்குமேடை ஏற இருந்த சிறைக் கைதிகள், மருத்துவமனைகளில் உயிருக்கு போராடும் நிலையில் இருந்த நோயாளிகளையும் நேரில் சந்தித்து கண்ணில் நீர் பெருக கங்கை ஜலத்தையும், ஸ்ரீமடத்து பிரசாதங்களையும் கொடுத்து அவர்களுக்கு ஸ்ரீ பெரியவர்களின் ஆசியை எடுத்துச் சென்ற தூதுவராகச் செயல்பட்டார்.

ஸ்ரீமடத்து மேனேஜராக இருந்து சந்தர்ப்பணை மற்றும் மடத்தின் பல்வேறு கிளைகள், முதியோர் இல்லங்கள், மாற்றுத் திறனாளிக்களுக்கான மையங்கள், கோவில் திருப்பணிகள், மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற அமைப்புகளில் ஸ்ரீ பெரியவர்களின் ஆணைக்கிணங்க தனிக்கவனம் செலுத்தினார். ஸ்ரீ பால பெரியவாளின் அருளாணைக்கிணங்க கோசாலைகளை பராமரிப்பதில் முக்கிய பங்காற்றினார். ஸ்ரீ மடத்திற்கு வரும் பக்தர்களை வாஞ்சையுடன் வரவேற்று கனிவுடன் உபசரித்து ஸ்ரீபெரியவர்கள் மூவரின் தரிசனமும் பெற வழிவகுத்தார்.


"**அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது**" என்ற ஔவையின் வாக்கிற்கேற்ப கிடைத்தற்கரிய மானிடப் பிறவியில் வாழ்வாங்கு வாழ்ந்து 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் நாள் ஸ்ரீ பெரியவர்களின் திருவடிகளில் பரிபூரணம் அடைந்த ஸ்ரீ எம். எஸ். அருணாச்சலம் ஐயர் அவர்களது பணிகள் என்றும் பக்தர்கள் நெஞ்சில் நீங்காமல் நிலைத்திருக்கும்.

**முனைவர் கலை. இராம. வெங்கடேசன்**
முதல்வர், ஸ்ரீ சங்கரா கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஏனாத்தூர், காஞ்சிபுரம்

# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## நாடு, தனி மனிதர் இரண்டின் சுதந்திரத்திற்காகவும் பிரார்த்தனை வாழ்த்து




வெகு காலமாக நாடு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுள்ளது. கடவுள் அருளாலும், மகான்கள் ஆசியினாலும், மக்களின் ஒப்பற்ற தியாகத்தினாலும் கிடைத்த இந்தச் சுதந்திரத்தினால் நமது நாடு செழித்தோங்கி, பஞ்சம் விலகி, தேச மக்கள் சமூகச் சச்சரவுகள், வகுப்புச் சச்சரவுகள் எதுவும் அறவேயின்றி, ஒற்றுமையுடன் அன்பு கொண்டு ஒரே சமுதாயமாக ஒட்டி வாழ அருள் பொழிய வேண்டுமென எங்கும் நிறைந்த கடவுளைப் பிரார்த்திப்போமாக!

நம் நாடு சுதந்திரம் அடைந்ததை ஒட்டி நாமும் தனிப்பட்ட முறையில் சுதந்திரம் அடைய முற்பட வேண்டும். நம்மை நாம் முற்றிலும் அறிந்து கொண்டால் தான் நாம் சுதந்திரம் அடைந்தவர்களாவோம். இந்நிலைக்கு மாறாகத் தற்போது நமது மனமோ இந்திரியங்களோ நமக்கு வசப்படவில்லை. ஆசையையும், கோபத்தையும் நம்மால் அடக்க முடியவில்லை. இவை இரண்டுமே நம்மை எப்பொழுதும் துன்புறுத்தி வருகின்றன. எந்தப் பொருளை எவ்வளவு அடைந்த போதிலும், போதும் எனும் மன நிம்மதி நமக்கு ஏற்படுவதில்லை. உலகத் துயரம் நம்மை விட்டபாடில்லை. சிறு துயரத்தைக் கண்டு விட்டாலும் மனம் கலங்கத்தான் செய்கிறது. இதனின்றும் கரை ஏற வழியென்ன?

நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். எவ்வளவோ காலமாகத் தன்னிஷ்டப்படியெல்லாமே தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்த இந்த மனத்தைத் தன்னுள் அடக்கச் சிறிது சிறிதாகவேனும் முயற்சி செய்ய ஆரம்பிக்க வேண்டும். மனம்

அடங்கி விட்டால் நமக்கு வேறொன்றும் தேவையில்லை. அதுதான் நாம் பெற வேண்டிய பூர்ண சுதந்திரமாகும்.

ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது மனத்தை சாந்தமாக வைத்துக் கொண்டு, வேறு நினைவுகளை மனத்தில் செலுத்தாமல், கடவுளது தியானத்தில் அமர வேண்டும். வேறு நினைவுகள் இல்லாமல் தியானம் செய்வதால் நாளடைவில் புத்தியானது தெளிவடையும். ஆசையையும், கோபத்தையும் அடக்குவதற்கு இது ஒரு சாதனமாகும். இவ்வித சாதனையைப் படிப்படியாக மேற்கொண்டவனுக்குச் சீக்கிரமாக ஆத்ம ஞானம் உண்டாகும். குறைவில்லாத அந்த ஞானத்தைப் பெறுபவன் தான் உண்மையான சுதந்திரனாகிறான்.

பிற ஸ்திரீகளைத் தாயார்களாக மதிக்க வேண்டும். பிற உயிரைத் தன்னுயிர் போல் மதிக்க வேண்டும். உயிர் போவதாயிருந்தாலும் உண்மையே பேச வேண்டும். சமூகச் சச்சரவுகள், வகுப்புச் சச்சரவுகள் செய்வதை அறவே ஒழிக்க வேண்டும். எல்லோரிடமும் சம அன்பு கொண்டு ஒழுக வேண்டும். மக்களெல்லாம் சுகமாக வாழ வேண்டுமென ஒவ்வொருவனும் நினைக்க வேண்டும். ஒவ்வொருவனும் தனது அறிவு வளர்ச்சிக்கும் ஆத்ம முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும். இவற்றுக்கெல்லாம் புத்தியும், சக்தியும் தருமாறு கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்.

பண்டைய பாரதம் போலவே இன்றைய சுதந்திர பாரதமும் உயரிய தியாக இலட்சியத்தில் உலகுக்கே வழிகாட்டியாகத் திகழ வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்!

## மூட்டை தூக்கி

உங்கள் வீடு ஒரு குடும்பம். இதற்கு அப்பாவும், அம்மாவும் தலைவர்கள். இப்படியே இந்த உலகம் முழுவதும் ஒரு பெரிய குடும்பம். இதற்கு ஈசுவரனும், அம்பிகையும் அப்பாவும், அம்மாவுமாக இருக்கிறார்கள். உங்களுக்கு உங்கள் தாய், தந்தையிடம் பக்தி இருக்க வேண்டும். அப்படியே பெரிய உலகக் குடும்பத்தின் பெரிய அப்பாவும், பெரிய அம்மாவுமான ஈசுவரனிடமும் அம்பாளிடமும் பக்தி இருக்க வேண்டும். உங்கள் குடும்பத்துக்கும் உலகக் குடும்பத்துக்கும் நடுவில் பள்ளிக்கூடம் என்கிற ஒரு குடும்பம் இருக்கிறது. உங்களுடன் படிக்கிறவர்களெல்லாம் உங்கள் குடும்பத்தில் உடன் வாழ்கிற சகோதரர்கள் மாதிரி. இந்தப் பள்ளிக் குடும்பத்தின் தலைவர் உபாத்தியாயர் – 'வாத்தியார்' என்கிற ஆசிரியர். அவரையும் ஓர் அப்பா – அம்மாவாக நீங்கள் மதித்து வணங்க வேண்டும்.

பள்ளிக் காலத்தில் உங்கள் கடமை படிப்பது ஒன்றுதான். உங்களுடைய கவனம் முழுவதும் படிப்பதிலேயே இருக்க வேண்டும். மற்ற விஷயங்களிலெல்லாம் நீங்கள் ஈடுபட இது சமயம் அல்ல. வேறு எத்தனையோ நல்ல விஷயங்கள் இருந்தாலும்கூட அவற்றையும் நீங்கள் படிப்பு முடிந்த பின் தான் கவனித்து ஈடுபடலாம். 'இப்போதே எனக்கு அவற்றில் ஈடுபடச் சிறிது சக்தியும், புத்தியும் இருக்கிறதே; எனவே உலகத்துக்கு நல்லது செய்கிற அந்தச் சமாசாரங்களில் இப்போதே பிரவேசிப்பேன்' என்று போகக் கூடாது.

ஒரு மூட்டைதூக்கி இருக்கிறான். அவனுக்கு இடுப்பைப் பிடித்துக் கொள்கிற மாதிரி இருக்கும்போது என்ன செய்வான்? மூட்டை தூக்க அப்போதும் கூட அவனுக்குக் கொஞ்சம் சக்தி இருந்தாலும், தூக்கமாட்டான். உடம்பு சரியில்லாததால் முதலில் அதை சொஸ்தம் செய்து கொள்வான். பூரணமாகக் குணம் ஆன பிறகுதான் மூட்டை தூக்குவான்.

உலகத்துக்கு நல்லது செய்வதும் மூட்டை தூக்குகிற மாதிரிதான். அதைச் செய்யச் சக்தி வேண்டும். சக்தியை நன்றாக வளர்த்துக் கொள்ளாமல் இந்த மூட்டையைத் தூக்குகிறேன் என்று ஆரம்பித்தால் இடுப்பைப் பிடித்துக் கொள்ளும். உடம்புக்குப் பிடிப்பு வியாதி உண்டாகிற மாதிரி உள்ளத்துக்கும் வியாதி ஏற்படும். சின்ன வயசில் உங்கள் உள்ளத்துக்குப் போதிய சக்தி ஏற்படுகிற முன்பே, படிப்பு தவிர மற்ற விஷயங்களை மேற்கொண்டால், உள்ளத்துக்கு வியாதி தான் உண்டாகும்.

ஏற்கனவே நம் உள்ளத்தில் ஆசை, கோபம் முதலிய பல வியாதிகள் இருக்கின்றன. முன்பு நாம் எல்லோரும் ஒரு விதத்தில் மூட்டைதூக்கிகளாக இருந்ததால் தான் இந்த வியாதிகள் வந்திருக்கின்றன. நாம் செய்கிற ஒவ்வொரு தப்புக் காரியமுமாகச் சேர்ந்து மூட்டையாகி விடுகிறது. இந்தப் பிறப்புக்கு முன்னால் இன்னொரு பிறப்பில் தப்புக்கள் செய்தோம். அதனால்தான் இப்போது இந்த உடம்பு என்கிற மூட்டை வந்திருக்கிறது. இதில் பழைய தப்புக்களின் வாசனையும் இருக்கிறது. அதனால்தான் ஆசை, கோபம் எல்லாம் நமக்கு இருக்கின்றன. அது போவதற்காகத்தான் குழந்தையாக இருக்கும் போது பள்ளிக்கூடத்துக்குப் போகிறோம். அறியாமை என்கிற வியாதி, படிப்பு என்கிற மருந்தினால் போகிறது. அதோடு நம் கெட்ட குணங்களும் போக வேண்டும். இதற்குப் படிப்பு மட்டும் போதாது. பணிவு வேண்டும். பணிந்து கிடந்தால் கெட்ட குணங்கள் ஓடிப் போகும். தாய், தந்தை, ஆசிரியர், தெய்வம் ஆகியவர்களிடம் பக்தியோடு, படிப்பில் கவனம் செலுத்தி வந்தால் அறிவும் வரும், குணமும் வளரும்.

பணிவு இல்லாமல் படிப்பில் மட்டும் தேர்ச்சி பெற்றால் எவரும் முழு மனிதனாக ஆக முடியாது. 'நமக்கு எல்லாம் தெரியும், நாம் புத்திசாலி' என்ற அகம்பாவம்தான் வெறும் படிப்பினால் உண்டாகும். இப்படிப்பட்டவர்களுக்குப் பகவான் துணை புரியமாட்டார். பகவானின் அநுக்கிரகம் இல்லாமல் எத்தனை புத்திசாலியாலும் வாழ்க்கையில் சந்தோஷம் பெற முடியாது.

பழைய தப்பு மூட்டை என்கிற வியாதிக்கு மருந்து படிப்பு. இந்த மருந்தைக் கவனமாகச் சாப்பிட்டு அந்த மூட்டையை இலேசாக்கிக் கொண்ட பிறகுதான், உலகத்துக்கு நல்லது செய்வதற்காக வேறு மூட்டையைத் தூக்கலாம். டாக்டர் நோயாளிக்கு மருந்து கொடுப்பதோடு நிற்கமாட்டார். ''இன்னின்ன ஆகாரம் சாப்பிடு, இன்னின்ன சாப்பிடாதே' என்று பத்தியமும் வைப்பார். இந்தப் பத்தியம் இல்லாமல் மருந்து மட்டும் பலன் தராது. உங்களுக்கெல்லாம் படிப்பு தான் மருந்து என்றால், அதோடு சேர்த்துக் கொள்ள வேண்டிய பத்தியம் பணிவு என்பதே. பணிவுடன் தெய்வபக்தி, குரு பக்தி, அப்பா – அம்மாவிடம் பக்தியுடன் இருந்து வாருங்கள். படிப்பிலேயே கவனம் செலுத்துங்கள். ஸ்வாமி காப்பாற்றுவார்.




# நீதிக் கதைகள்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## ஸ்ரீ ஆதிசங்கரர்

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்கள் உண்டு. கிருதயுகத்தில் தர்மங்கள் பூரணமாக இருந்தன. ஆனாலும் சிறிய அளவில் அதர்மங்கள் இருந்து வந்தன. அந்த யுகத்திலே மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம் என்ற ஐந்து நிலையில் வைகுண்ட லோகத்தில் உள்ள ஸ்ரீமன் நாராயணன் அவதாரம் எடுத்தார். இந்த ஐந்து அவதாரங்களுக்கும் தாய் தந்தையர் இல்லை. ஸ்ரீமன் நாராயணன் ஒரு சிறிய பணிக்காக, ஆவேசப் பணிக்காகத் தோன்றி அந்தப் பணி முடிந்தவுடன் மறைந்து விடுகிறார். இராமாவதாரம் திரேதாயுகத்தில் நடைபெற்றது. பரசுராம அவதாரமும் திரேதாயுகத்தில் நடைபெற்றது. இரண்டு அவதாரத்திற்கும் தாய் தந்தையர் உண்டு. பல நூறு ஆண்டுகள் வாழ்ந்த வரலாறு உண்டு. திரேதாயுகத்தின் ஒரு பகுதியில் ஒரு பாகத்தில் அதர்மம் மேலோங்கி நின்றது. இதனைச் சரி செய்ய இராமரும், பரசுராமரும் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்கள். பிறகு பலராமனும், கிருஷ்ணனும் துவாபர யுகத்தில் தோன்றினார்கள். அப்போது சரி பாதி அதர்மம் தலை தூக்கி நின்றது. கோடிக் கணக்கான மக்களை கொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்காகவே மகாபாரத யுத்தம் நிகழ்ந்தது.

அடுத்தபடியாகக் கல்கி அவதாரம் மட்டும் உள்ளது. அது, கலியுகத்தின் கடைசியில் வருகிறது. இதன் மத்தியில், கலியுகம் பிறந்து 2000 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டில் உள்ள சூழ்நிலையை அனுசரித்து கயிலையில் வசிக்கும் பரமேஸ்வரன் ஸ்ரீசங்கரராக

கேரள நாட்டில் காலடி என்ற ஊரில் அவதரித்தார்.

விஷ்ணுவின் அவதாரங்கள் எல்லாம், சிலரை ரக்ஷித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய சூழ்நிலையில் ஏற்பட்டது. ஆனால் கலியுகத்திலே பாதி அதர்மமான யுகமாக இருந்த போதிலும் மனிதர்களுடைய இரத்தம் வரை அதர்மம் படியவில்லை. ஆகவே அவனை சிக்ஷிக்க வேண்டிய அவசியம் இல்லை. மனிதனுடைய புத்தியிலேயே அவை இருந்தன. அந்த புத்தியை தெளிவுபடுத்துவதற்கு, உண்மை ஞானத்தை ஏற்படுத்துவதற்கு, தத்துவ சிந்தனையைத் தூண்டுவதற்கு தக்ஷிணாமூர்த்தியாய் ஞானோபதேசம் செய்த பரமேஸ்வரன், பூலோகத்தில் அவதரித்து, 32 ஆண்டுகள் இந்தப் பூவுலகில் வாழ்ந்து அனேக பணிகளை மக்களுக்கு அருளியுள்ளார். ஐந்து வயதில் உபநயனம். எட்டு வயதிற்குள் எல்லா சாஸ்திரங்களிலும் புலமை, எட்டு வயதிற்குள் நதியை வீட்டுக்குப் பின் புறம் வரவழைக்கும் பெருமை, ஏழைக்குத் தங்க நெல்லிக்கனியை வரவழைத்துத் தரும் சிறப்பு ஆகிய அற்புதங்களைச் செய்து காட்டினார். 8 வயதில் துறவியானார். 15 வயதிற்குள் காசிக்குச் சென்று பிரம்மசூத்திர பாஷ்யம், கீதைக்கு பாஷ்யம்- உபநிஷத்துக்கு பாஷ்யம் ஆகியவற்றைச் செய்தார். பல பண்டிதர்களிடையே சாஸ்திர வேதாந்த விசாரம் செய்தார். காசியில் இருக்கும் விஸ்வேஸ்வரரே ஸ்ரீ சங்கரரின் கொள்கைகளை அங்கீகரித்தார். ஸ்ரீ சங்கரர், வேத வியாசரின் அருளினால் அத்வைத வேதாந்த சித்தாந்தத்தை நிலை நாட்டினார். நாடு முழுவதும் பலமுறை யாத்திரை செய்தார். பல க்ஷேத்திரங்களில் யந்த்ரஸ்தாபனம் செய்தார். கடைசியாக காஞ்சி காமாக்ஷி கோயிலில் யந்த்ர ஸ்தாபனம் செய்தார். சர்வக்ஞபீடம் ஏறினார். பல கோயில்களில் பூஜை முறைகளை ஒழுங்குபடுத்தினார்.

ஸ்ரீ சங்கரரின் கொள்கை இந்து மதத்தின் கொள்கை.

(1) நிர்குண, சகுண அவதார மூர்த்தங்களை ஒப்புக் கொள்ளுதல் (2) கர்ம காண்டத்தை ஞான காண்டத்துக்குச் சாதனமாக ஆக்குதல் (3) நம்முடைய பாரத நாட்டை - பாரத நாட்டில் உள்ள நதிகள், குளங்கள், மலைகள் இவற்றைப் புனிதமாகக் கருதுதல் (4) மக்களிடையே பரஸ்பர அன்பு, சேவை பக்தி ஆகியவற்றைத் தோற்றுவித்து ஒற்றுமையை ஏற்படுத்துதல் (5) ஆன்மிகத்தின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதல் ஆகியவை இந்து மதத்தின் கொள்கைகள்.

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் ஆன்மிக உணர்வு ஏற்படுவதற்காக, பிள்ளையார் முதல் ஆஞ்சநேயர் வரையிலான பல தெய்வங்கள் பற்றிய ஸ்லோகங்களை ஸ்ரீ சங்கரர் செய்தார். மக்களுடைய அன்றாட பிரச்சினைகள் முதல் ஆன்மிகம் வரை பல மந்திர தந்திரங்கள் அடங்கிய 'பிரபஞ்ச சாரம்' போன்ற நூல்களை இயற்றினார். மக்களின் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொடுக்கும் நோக்கத்துடன் '**பஜகோவிந்தத்தையும்**, கேள்வி -பதில் அடங்கிய '**ப்ரச்னோத்தர ரத்ன மாலிகா'** என்ற நூலையும் இயற்றி அருளினார்.

இந்தப் பணிகளெல்லாம் தொடர்ந்து நடைபெறுவதற்குப் பல பீட ஸ்தாபனங்களை நிறுவினார்.

பொதுவாக, ஸ்ரீசங்கரரின் தோற்றத்தினாலும் அவர் செய்த பணிகளாலும் பிற்காலத்தில் இருந்த மதாச்சார்யர்களும், சமூகப்பணி செய்பவர்களும், சமூகத் தொண்டு புரியும் ஸ்தாபனங்களும் ஒரு வழி அமைத்துக் கொள்ள முடிந்தது. ஸ்ரீ சங்கரர், ஜகத்குரு- (World Philosopher) இந்தப் பெருமானுடைய ஜயந்தி விழா ஆண்டுதோறும் வைசாக சுக்ல பஞ்சமி அன்று வருகிறது.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**

சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,**
**ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்**
**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய**
**ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



### தமிழ் புத்தாண்டு முன்னிட்டு திருப்பதி மடத்தில் ஆச்சாரியாள் அவர்கள் ஆற்றிய அருளாசி உரையின் சாராம்சம்

**ஓம் ஆதித்யாயச ஸோமாய மங்களாய புதாய ச ।**
**குரு ஸுக்ர ஸநிப்யஸ்ச ராஹவே கேதவே நமஹ ॥**

நம்முடைய தர்மத்திலே சித்திரை மாதம் துவங்கி, பங்குனி மாதம் வரையிலே விசேஷமாக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பண்டிகைகளை, விரதங்களை நாம் அனுஷ்டித்து வருகிறோம். பங்குனி மாசக் கடைசியிலே பங்குனி உத்திரம் என்பதாக ஸ்வாமியுடைய பார்வதி திருக்கல்யாணத்தை நாம் செய்கிறோம். இந்த சித்திரை மாதம் அதாவது சாந்திர மாசப்படி, சித்திரை மாசம் புதிய வருஷமாக ஸ்ரீ விஸ்வாவஸு வருஷம் ஆரம்பிக்க இருக்கிறது. வேதத்திலே ஒரு தேவதையின் பெயராக விஸ்வாவஸு என்று குறிப்பிடப்படுகிறது.

அந்த விஸ்வாவஸு என்ற சப்தம் தேவதையை குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. முக்கியமாக தாய்க்குலம் அந்த மாத்ரு சக்தியின் தேவதையாக விஸ்வாவஸு கருதப்படுகிறார். உலகத்திற்கு நல்ல பொருளை அளிக்கக் கூடிய பொருள், இந்த விஸ்வாவஸு என்ற பதத்தில் அமைந்து இருக்கிறது. வசு என்றால் த்ரவியம் . **''அன்னதா வஸுதா வ்ருத்தா''** என்று லலிதா சஹஸ்ரநாமத்தில் நாம் சொல்கிறோம். அஷ்ட வசுக்கள் என்று சொல்கிறோம். இந்த சித்திரை ஆரம்பத்திலே பஞ்சாங்கத்தை படித்து, அந்த பஞ்சாங்கங்களை படிப்பதன் மூலமாக நமக்கு ஐஸ்வர்யம், ரோக நிவர்த்தி, பாப நிவர்த்தி, நாம் நினைத்துக் கொண்டு இருக்கும் நல்ல காரியங்கள் தங்கு தடையின்றி நிர்விக்னமாக பூர்த்தி அடைதல் இப்படி பல பலன்கள் கிடைக்கின்றன.

இந்த பஞ்சாங்கத்தை படித்து பூஜைகள் செய்வதனாலே, நமக்கு முழுமையாக தேவதைகளின் அனுக்ரகம் கிடைக்கிறது. திருமலையிலே விசேஷமாக பிரதி தினமும் அந்த வெங்கடேஸ்வர சுவாமி சந்நிதியிலே பஞ்சாங்கத்தை படித்து, அன்றைய விசேஷ பூஜைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இப்படி அந்த பஞ்சாங்கம் ஸ்ரவணம் செய்து, அன்றைய தினம் விசேஷமாக படைக்கக் கூடிய பிரசாதங்களை, நாம் உண்டு, இந்த வருஷத்திலே பொதுவாக பலன்கள் அமைந்து இருந்தாலும், நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய தேவை இன்று இருக்கின்றது. 1960 யிலிருந்து இந்த ஐந்து, ஆறு கிரகங்கள் ஒன்று சேர்ந்த நிலையிலே நம்முடைய காஞ்சி பெரியவர்கள் சொல்லி, நவக்ரஹ ஸ்தோத்திரங்களை சொல்லி, கோளறு பதிகங்களையும் சொல்லி, தமிழில் அமைந்து இருக்கின்ற அவை நல்ல நல்ல என்ற ஸ்தோத்திரத்தையும் பக்தர்களை படிக்கச் சொல்லி ஆசி அருளினார்கள். அது போன்று இந்த விஸ்வாவசு வருஷத்திலும் நவக்ரக ஸ்தோத்திரங்களை , குறிப்பாக ஞாயிற்றுக் கிழமை ஆறு கிரகங்கள் ஒன்று சேரும் நிலையிலே, அந்த நவக்ரகங்களின் அனுக்ரகங்கள் மட்டும் கிடைக்கும் வகையிலே அந்த நல்ல பலன்கள் கிடைக்கும் விதத்திலே நவக்ரஹ பூஜைகளை, நவக்ரஹ பிரதக்ஷணங்களை விசேஷமாக செய்து, நவக்ரஹங்களை பல்வேறு பூஜா முறைகளால் வழிபட்டு, வெங்கடேஸ்வர ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் மேன்மேலும் சகல நன்மைகளையும் பெற்று, இந்த புதிய புத்தாண்டை சிறப்பாகக் கொண்டாடி, அனைவரும் இந்த நல்ல பலன்களைப் பெற வெங்கடேஸ்வர சுவாமியை பிரார்த்திப்போமாக.

**ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர**

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

# सदासिव ब्रह्मेन्द्र कीतर्ना:

**सर्वम् ब्रह्मम मयम् रे रे सर्वम् ब्रह्मम मयम्**

किम् वचनीयम् किमवचनीयम् किम् रचनीयम् किमरचनीयम् (सर्वम्)

किम् पटनीयम् किमपटनीयम् किम् भजनीयम् किमभजनीयम् (सवम्)

किम् बोद्दव्यम् किमबोद्दव्यम् किम् भोक्तव्यम् किमभोक्तव्यम् (शवम्)

सर्वत्र सदा हम्सहद्यानम् कर्तव्यम् भो मुक्ति निदानम् (शर्वम्)

**ஸர்வம் ப்ரம்ம மயம் ரே ரே ஸர்வம் ப்ரம்ம மயம்**

கிம் வசனீயம் கிமவசனீயம் கிம் ரசனீயம் கிமரசனீயம் (ஸர்வம்)

கிம் படனீயம் கிமபடனீயம் கிம் பஜனீயம் கிமபஜனீயம் (ஸர்வம்)

கிம்போத்தவ்யம் கிமபோத்தவ்யம் கிம் போக்தவ்யம் கிமபோக்தவ்யம் (ஸர்வம்)

ஸர்வத்ர ஸதா ஹம்ஸத்யானம் கர்தவ்யம் போ முக்தி நிதானம் (ஸர்வம்)

பொருள் :

எல்லாம் ப்ரம்மமயம் அடே அடே! எல்லாம் பரம்மமயம் சொல்லத்தக்கது எது? சொல்லத்தகாதது எது? செய்யத்தக்கது எது? செய்யத் தகாதது எது? (எல்லாம்)

கற்கத் தகுந்தது எது? கற்கத் தகாதது எது? பக்தியோடு சேவை செய்யத் தக்கது எது? பக்தியோடு செய்யத் தகாதது எது? (எல்லாம்) அறியத் தகுந்தது எது?

அறியத் தகாதது எது? இன்பமாய் அனுபவிக்கத் தகுந்தது எது?

அனுபவிக்கத் தகாதது எது? ஓய் முக்திக் காரணமான ஹமஸத் த்யானமே செய்யத் தகுந்தது.

# ஸ்ரீ பாதஸப்ததி-5

ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி இயற்றியது

**பி. ஆர். கண்ணன்**

**ஸம்ப்4 ராந்திஸ்தவதே3வி ஸா விஜயதே மாநாவநம்ரே ஸிவே**
**த்வத்பாதா3ம்பு3ருஹப்ரஹாரமுதி3தே மந்த3ம் ஸமுத்தா2யிநி ।**
**லாக்ஷாராக3ரஸாருணம் நிபதிதம் க3ங்கா3பயஸ்ஸீகரம்**
**த்3ரு'ஷ்ட்வா ஸோணிதஸங்கயா தரலிதா காந்தம் யதா 3லம்ப3தா:2 ॥ 15**

15. ''உன் தாமரை பாதங்களின் ஆக்ரமிப்பால் மகிழ்ந்த சிவன் ஸாஷ்டாங்கமாக வணங்கிவிட்டு, மெதுவாக எழுந்திருக்கும் போது, கங்கையின் நீர்த்துளிகள் அவருடைய தலையிலிருந்து விழுவதையும், தங்கள் பாதத்தின் சிவப்பு நிறத்துடன் தொடர்பு கொண்டதால் சிவப்பு நிறமாக இருப்பதையும் நீங்கள் காண்கிறீர்கள். இந்த நீர்த்துளிகளை இரத்தத் துளிகளெனச் சந்தேகித்து, நீங்கள் உங்கள் ப்ரியமானவரைத் தழுவுகிறீர்கள் (அதிக கோபத்திற்கு மன்னிப்புக் கேட்கும் செயலாக). அந்த குழப்பம் வாழ்க.

தேவியின் கோபம் தன் பக்தர்களிடம் நீண்ட காலம் நீடிக்காது. அவள் எப்போதும் கருணையும் இரக்கமும் நிறைந்தவள்; மனிதனின் பாவங்களை மன்னிக்க எப்போதும் தயாராக இருக்கிறாள். மனிதன் தன் அகங்காரத்தை ஒதுக்கிவிட்டு அவள் பாதங்களில் தஞ்சம் புகுவதற்கு மட்டுமே அவள் காத்திருக்கிறாள்.

ஆதி சங்கரர் தேவ்யபராத க்ஷமாபண ஸ்தோத்திரத்தில் கூறுகிறார்:

**ஜகதம்ப விசித்ரம்-அத்ர கிம் பரிபூர்ண கருணாஸ்தி சேந்-மயி.**
**அபராத-பரம்பராவ்ருதம் ந ஹி மாதா ஸமுபேக்ஷதே ஸுதம் (11)**

உலகங்களுக்கெல்லாம் தாயே ! உமது முழு அருள் என் மீது இருந்தால், அதில் என்ன விந்தை இருக்கிறது ? மகன் தொடர்ந்து தவறு செய்தாலும், தாய் அவனை அலட்சியப்படுத்துவதில்லை.

**ஸா பாத3த்3விதயாஹதிர்ஜயதி தே யஸ்யாம் கி3ரீந்த்3ராத்மஜே**
**ப்ராசீநேந்து3யுதே நகே2ந்து3த3ஸகே மௌலிஸ்த2லீஸங்க3தே ।**

**ஸ்வஸ்யைகாத$^3$ஸமூர்திதா-ஸமுசிதாநேகாத$^3$ஸைவோடு$^3$பா-**
**நாபி$^3$ப் ராணஇவாப$^3$பௌ ஸ ப க$^3$வாநேகோஸ்பி ருத்$^3$ர: ஸ்வயம் ॥ 16**

16. மலைகளின் தலைவனான ஹிமவானின் புத்ரியே! சிவனின் தலையில் (அவர் நமஸ்கரிக்கும் போது) உங்கள் இரு பாதங்களின் அடி மிகவும் அழகாக இருக்கிறது. தங்கள் பாதத்தின் நக வடிவில் உள்ள பத்து சந்திரர்கள் சிவனின் தலையில் ஏற்கனவே இருக்கும் ஒரு சந்திரனுடன் சேரும் போது, அவர் பதினோரு ருத்ர ரூபம் கொண்டவராகவும், ஒவ்வொரு ரூபமும் தலையில் சந்திரனைக் கொண்டவராகவும், பிரகாசிக்கிறார், சிவன் ஒருவராகவே இருப்பினும் ( இரண்டென்பதே இல்லாமல்).‘

**பதினொரு ருத்ரர்கள் :** வாமதேவர், ஜ்யேஷ்டர், ஸ்ரேஷ்டர், ருத்ரர், காலர், கலவிகரணர், பலவிகரணர், பலர், பலப்பிரமதனர், சர்வபூததமனர் மற்றும் மனோன்மனர்.

தேவியின் வெளிப்படையான தண்டனை கூட உண்மையில் பக்தருக்கு ஒரு வரமாகவே ஆகிறது. தேவியினால் நேரிடையாகவே போர்களில் தோற்கடிக்கப்பட்ட அனைத்து அசுரர்களின் கதைகளிலிருந்தும் இது தெளிவாகிறது.

துர்கா ஸப்தசதியில். மகிஷாசுரனைக் கொன்ற பிறகு தேவர்கள் பிரார்த்தனையில் கூறுகிறார்கள்:

**த்ருஷ்ட்வைவ கிம் ந பவதி ப்ரகரோதி பஸ்ம**
**ஸர்வாசுரன் - அரிஷு யத் ப்ரஹிணோஷி ஸஸ்திரம் ।**
**லோகாந் ப்ரயாந்து ரிபவோபி ஹி ஸஸ்த்ரபூதா**
**இத்தம் மதிர்-பவதி தேஷ்வபி தேதிஸாத்வீ ॥ ( 4.19)**

தங்கள் அசுர எதிரிகள் அனைவரையும் ஒரு பார்வையால் தாங்கள் சாம்பலாக்கி விட முடியாதா? பிறகு, நீங்கள் அவர்களுக்கு எதிராக ஆயுதங்களைப் பயன்படுத்துவது, உங்களின் மிகவும் இரக்கமுள்ள சிந்தனையின் காரணமாகும்: ‘அவர்கள் எதிரிகள் என்றாலும், அவர்கள் என் ஆயுதங்களால் சுத்திகரிக்கப்பட்டு, மங்களகரமான உலகங்களை அடையட்டும் என்று.

**கிம் வைரிஞ்சிகரோடிகோடிநிஹதம் கிம் வா ப$^2$ணிக்$^3$ராமணீ-**
**நிஸ்வாஸாநிலகே$^2$தி$^3$தம் த்வித$^3$மிதி ப்ரேம்ணாபிஸல்லாபிநா ।**
**மாநஸ்யோபஸமே கரேண ஸநகைராம்ரு’த் $^3$நதா ஸம்பு நா**
**பூ யஸ்சும்பி$^3$தமம்பு$^3$ஜத்$^{32}$திபத$^3$ம் த் யாயாமி மாயே தவ ॥ 17**

17. மகாமாயே! சிவன் (நமஸ்காரத்திற்குப் பிறகு) நீங்கள் சமாதானம் அடைந்ததும், அன்பான உரையாடலைத் தொடங்கும் போது, அவர் உங்கள் ஒளிரும் தாமரை பாதங்களை உயர்த்தி மீண்டும் மீண்டும் முத்தமிட்டு கேட்கிறார்: உன் பாதங்கள் பிரம்மாவின் மண்டை ஓட்டின் (கூர்மையான) முனைகளால் தாக்கப்பட்டதா, அல்லது சர்ப்ப மன்னன் சேஷனின் (விஷ) சுவாசத்தினால் துயருற்றதா? என்று. தங்களின் இந்த பாதங்களை நான் தியானிக்கிறேன்.

ஒருமுறை, சிவன் ஒரு பெரிய ஒளியின் வடிவத்தை எடுத்த போது, பிரம்மா ஒரு அன்னமாக மாறி, அந்த ஸ்தம்பத்தின் உச்சியைத் தேடிப் பறந்தார். உச்சியை அடைய முடியாமல் திரும்பிய பிரம்மா சிவனிடம் தான் உச்சியை பார்த்ததாகப் பொய் சொன்னார். இதைத் தொடர்ந்து, சிவன் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து, பிரம்மாவின் பிரார்த்தனையின் பேரில், தன் தலையில் அவரது மண்டை ஓட்டை அணிந்தார். சிவபெருமான் ஆதிசேஷ நாகத்தையும் தலையில் அணிந்துள்ளார். இந்த ஸ்லோகம் சிவனின் தலையில் உள்ள இந்த இரண்டு அலங்காரங்களைக் குறிக்கிறது.

தேவி தன் பக்தனின் தீய மனப்பான்மைகளை மன்னிக்கத் தயாராக இருக்கிறாள். அவர்கள் வருத்தமடைந்து, அவளுடைய அருளுக்காக ஏங்கினால் பக்தர்களுக்கு சிவன் வழி காட்டுகிறார்.

பகவான் கீதையில் கூறுகிறார்:

**''கர்ஷயந்த: சரீரஸ்தம் பூதக்ராமம் அசேதஸ:**
**மாம்சைவாந்த: சரீரஸ்தம் தான்-வித்-யாஸுர-நிஸ்சயான் ।** (17:6)

'உடலில் உள்ள அனைத்து கூறுகளையும் மற்றும் உடலில் வசிக்கும் என்னையும் உணர்வின்றி துன்புறுத்துவது - அப்பேர்ப்பட்டவர்கள் அஸுரப்பாங்கு உடையவர்கள் என அறிவாயாக.'

தன்னுள் உறையும் தேவியை சித்திரவதை செய்ததற்காக பக்தன் வருந்தினால், அவன் செய்த தவறுகளுக்காக வருந்தினால், தேவி அவனை உடனே மன்னிக்கிறாள். தேவி பாகவதத்தில், விஷ்ணு தனது தலையை இழந்த ஒரு சந்தர்ப்பத்தில், அதற்கு பதிலாக குதிரையின் தலை இணைக்கப்பட்டு, தேவியின் அருளால் ஹயக்ரீவராக மாறுவதற்கு முன்பு, வேதங்கள் தேவியைப் புகழ்ந்தன:

''ஹரே: கிம் வா மாதர்-துரிதததி-ரேஷா பலவதி
பவத்யா: பதாப்ஜே பஜன-நிபுணே க்வாஸ்தி துரிதம்'' ।  (1:5:62)

‘அம்மா! ஹரி செய்த ஏதோ கடுமையான தவறு காரணமாக இருந்தால், அது சாத்தியமில்லை. உனது தாமரைத் திருவடிகளை இடைவிடாமல் வணங்குபவனுக்கு, பாவம் எப்படி இருக்கும்?’’

**பூர்வம் ஜஹ்நுஸுதா ஸக்ரு’ந்முரரிபோ: ஸ்ரீபாத$^{3}$ஸங்க்ஷாலநாத்-**
**புண்யாதீ$^{3}$த்$^{3}$ரு’ஸவைப வா ஸமப வத் கோ$^{3}$விந்த$^{3}$வந்த்$^{3}$யே ஸிவே ।**
**ஸேயம் ஸம்ப்ரதி ஸம்பு மௌலிநிலயா மாநப்ரஸங்கா$^{3}$நதௌ**
**நித்யம் த்வச்சரணாவஸேசநபு வா புண்யேந கீத்$^{3}$ரு’க்$^{3}$ப வேத் ॥ 18**

18. கோவிந்தன் வழிபடும் தேவி! ஒருமுறை, கங்கை (ஜஹ்னு மஹரிஷியின் புத்ரி) விஷ்ணுவின் ஸ்ரீ பாதத்தை நனைத்த போது, இந்தப் புண்ணியத்தால் அவளுடைய தேஜஸ் அதிகரித்தது. இப்பொழுது, சிவபெருமான் உங்களைச் சாந்தப்படுத்துவதற்காக தினமும் உமது பாதங்களில் ஸாஷ்டாங்கமாக வணங்கும்போது, சிவனின் தலையில் இருக்கும் கங்கை, உங்கள் பாதங்களை நனைத்து, இந்தப் புண்ணியத்தால், அவள் இன்னும் என்ன பெரிய சிறப்பைப் பெறப் போகிறாள்?

திரிவிக்ரம அவதாரத்தின் போது, விஷ்ணு தனது பாதத்தை மேல்நோக்கி உயர்த்திய போது, பிரம்மா தனது கமண்டலுவின் நீரால் அந்த பாதத்தை ப்ரக்ஷாலனம் செய்தார். அந்த நீர் கங்கையாக மாறியது. இந்தப் புண்ணியத்தால் கங்கை சிவபெருமானின் தலையை அலங்கரிக்க வந்தாள்.

இப்போது, தேவி விஷ்ணுவினாலும் வணங்கப்படுகிறாள். கங்கை, சிவனின் தலையில் இருந்து, சிவன் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும் போது, தேவியின் பாதங்களை நனைத்தாள். இந்த இணையற்ற கூடுதல் புண்ணியத்தால், கங்கை மேலும் புண்யவதியாகிறாள். ஸ்காந்த புராணத்தில் காசி கண்டத்தில், கங்கா மாஹாத்ம்யம் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது, அதில் கூறப்பட்டுள்ளது:

**‘‘ஸ்ருதா-பிலஷிதா த்ருஷ்டா ஸ்ப்ருஷ்டா பீதா அவகாஹிதா**
**பும்ஸாம் வம்ஸத்வயம் கங்கா தாரயே-ன்னாத்ர ஸம்ஸய:’’ ।**

‘‘கேட்டால், நேசித்தால், பார்த்தால், தொட்டால், குடித்தால், குளித்தால், கங்கை, மனிதர்களின் இரு பரம்பரைகளையும் (அதாவது தாய், தந்தையரின் பரம்பரை) காப்பாற்றுகிறாள். இதில் எந்த சந்தேகமும் இல்லை’’.

(தொடரும்)

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் ப்ராணதத்வவிதே வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ப்ராணஸ்யேதம் வசே ஸர்வம் சேதனாசேதனம் ஜகத் ।**

**ப்ரஹ்மதந்த்ராத்மகோ ஹ்யேஷ: இதி வேதாந்தபாஸ்கர: ।।**

இந்த சேதனாசேதனமாக இருக்கக் கூடிய பிராணனுடைய வசத்தில் இருக்கிறது. இந்த பிராணன் ஆகிறவன் பிரம்மத்திற்கு வசமாக இருக்கின்றான்.

## 36. பிராணனுடைய மகிமை

**ப்ராணஸ்யேதம் வசே ஸர்வம் த்ரிதிவே யத் ப்ரதிஷ்டிதம் ।**

**ப்ரச்னோபநிஷத் 2-13**

*இதெல்லாம் பிராணனுடைய வசத்திலேயே இருக்கிறது. சொர்க்கத்தில் இருக்கக் கூடியதெல்லாமும் பிராணனுடைய அதீனத்திலேயே இருக்கிறது.*

இந்த ஜகம் முழுவதும் பிராணனிலிருந்தே பிறந்து, பிராணனிலே இருந்து, பிராணனிலேயே லயம் ஆகிறது. இந்தப் பிராணனுக்கு ஹிரண்ய கர்ப்பன், விராட புருஷன், ஸூத்ராத்மா என்று பல பெயர்கள் உள்ளன.

இந்த ஜகத்தை ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதி தெய்வீகம் -என்று மூன்று பிரிவுகளாகச் சொல்வார். ஆத்யாத்மிக பிரபஞ்சம் என்றால், சரீரம், இந்திரியங்கள், மனம், புத்தி, அஹங்காரம், பிராணன்கள் அடங்கியது. இந்த சகல காரிய கரணங்களுக்கும் பிராணனே ஆத்மனாயிருக்கிறான்.

ஆதிபௌதிக பிரபஞ்சம் என்றால், மண், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களால் ஆனது. இதற்கெல்லாம் ஆச்ரயமானவனே வாயு. ஆதிதெய்வீக பிரபஞ்சம் என்றால் கிரகங்கள், நக்ஷத்திரங்கள், தேவதைகள், பித்ருக்கள் சேர்ந்தது. இந்த பிராணனாகிய ஹிரண்ய கர்ப்ப உபாசனையினால் பிரம்ம லோகம் கிடைக்கிறது.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# வேத ஸூக்தங்கள்

## அகமர்ஷண ஸூக்தம்.

பாபம் செய்யாத மனிதனில்லை. தெரிந்தே செய்யும் பாபம், தெரியாமல் செய்யும் பாபம் என்று இரண்டு உண்டு. இதில் முதலில் சொன்ன பாபம் தான் அதிகம். மனோ வாக்காயம் இவற்றால் பலவிதமான பாவங்கள். வேதமே **'அக்னே நய ஸுபதா'** அக்னியே எனக்கு நல்வழி காட்டு என்று கேட்டுக் கொண்டாலும் காமத்தாலும், க்ரோதத்தாலும் செய்யப்படும் பாவங்கள் நிறைய.

கண்டதைப் புசிப்பது, தகாத தானம் வாங்குவது, மனத்தினால் ஒருவனுக்குத் தீங்கு நினைப்பது இப்படிப் பலப் பல. இவைகளைப் போக்க வேதம் ஸ்னானம் செய்யும் முன் இந்த வேத ஸூக்ததைதை அருளியுள்ளது. **'அகம்'** என்றால் பாபம் **'மார்ஷணம்'** என்றால் அழிப்பது என்று பொருள் ஸூக்தத்தைப் பார்ப்போம்.

1. 'பொன் கிரீடமணிந்த வருண பகவானை நான் சரணம் அடைகிறேன். நல் வாழ்க்கையிலிருந்து விலகியவர்களிடமிருந்து உண்டதாலும், பாவிகளிடமிருந்து தானம் வாங்கினதால் எந்த பாவம் உண்டோ என்னுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி புனிதமான நீர்த்துரையைக் காட்டிக் கொடுத்தருள்வீராக.

2. மனதாலோ, வாக்காலோ, செயலாலோ செய்யப்பட்ட எந்த பாபம் என்னிடமுள்ளதோ அதை என்னிடமிருந்து விலக்கி இந்த்ரனும், வருணனும், ப்ருஹஸ்பதியும் ஸவிதாவும் எங்களை மீண்டும் புனிதமாக்கட்டும்.

3. நீரில் மறைந்து இருக்கும் அக்னி தேவனுக்கு நமஸ்காரம். இந்த்ரனுக்கு நமஸ்காரம். வருணனுக்கு நமஸ்காரம். வாருணீ தேவதைக்கு நமஸ்காரம். ஜல தேவதைகளுக்கு நமஸ்காரம்.

4. ஜலத்தில் எது கொடியதோ எது அசுத்தமானதோ எது அமைதியைக் குலைப்பதோ அது விலகிப் போகட்டும். அளவுக்கு மீறிய உணவாலும், பானத்தாலும் தகாத இடத்தில் பெற்ற தானத்தாலும் என்ன கெடுதல் உண்டோ அதை என்னிடமிருந்து வருண பகவான் தனது கையால் துடைத்து விடட்டும்.

5. அங்கனம் பாவம் நீங்கப் பெற்ற நான் அழுக்கற்றவனாய், தளைகள் அற்றவனாய் தீமைகளிலிருந்து விடுபட்டவனாய் நாகப்ருஷ்டம் என்னும் ஸ்வர்கத்திற்கு ஏறி ப்ரம்மாவுடன் ஸர்வலோக முக்தியை அடைவேனாக.

6. நீர் நிலைகளிலிருந்து கொண்டு பாவங்களைப் போக்கும் வருண பகவான் நம்மை புனிதமாக்கட்டும்.

**7. கங்கையே யமுனையே ஸரஸ்வதியே சுதுத்ரியே மருத்வ்ருதையே ஆர்ஜகீயே பருஷ்ணி அஸிக்னி விதஸ்தா ஸுஷோமா** ஆகியவர்களுடன் கூடி எழுந்தருளி என்னுடைய இந்த ஸ்துதிக்குச் செவி சாய்க்க வேண்டும்.

(தொடரும்)




।। श्रीः ।।

।। श्रीकामकोटिप्रदीपः।।

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



ஸ்ரீ ஆதி சங்கர பரம்பராகத ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம்
ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன்,
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தால் வெளியிடப்படும் மாதாந்திர பத்திரிக்கை






SRI KAMAKOTI KOSASTHANAM
SCAN & PAY

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் - ரூ.220/- | மூன்று வருடம் - ரூ. 600/- |
| ஐந்து வருடம் - ரூ. 1000/- | ஆயுள் சந்தா - ரூ. 5000/- |

UPI ID : 6005671674skk@indianbk

சந்தாவினை புதுப்பிப்பவர்கள் மற்றும் புது சந்தாவிற்கு QR code மூலம் பணம் செலுத்தி, பெயர், விலாசம், கைப்பேசி எண் மற்றும் சந்தா தொகை வங்கி பரிமாற்ற விபரத்துடன் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறோம். kamakotipradeepam@gmail.com அல்லது + 91 90038 45456 (WhatsApp)

# வைகாசி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 15-05-2025 | வியாழன் | மூலம் — தேர் |
| 16-05-2025 | வெள்ளி | மூலம் — வேத பாராயணம் |
| 17-05-2025 | சனி | உத்ராடம் — தேர் |
| 18-05-2025 | ஞாயிறு | உத்ராடம் — வேத பாராயணம் |
| 20-05-2025 | செவ்வாய் | அவிட்டம் தேர் — அவிட்டம் வேத பாராயணம் |
| 23-05-2025 | வெள்ளி | ஏகாதசி |
| 24-05-2025 | சனி | த்வாதசி — ப்ரதோஷ பூஜை |
| 06-06-2025 | வெள்ளி | ஸ்மார்த்த நிர்ஜல ஏகாதசி |
| 07-06-2025 | சனி | த்வாதசி — ஸ்வாதி தேர் |
| 08-06-2025 | ஞாயிறு | ஸ்வாதி வேத பாராயணம் — ப்ரதோஷ பூஜை |
| 09-06-2025 | திங்கள் | அனுஷம் தேர் |
| 10-06-2025 | செவ்வாய் | அனுஷம் வேத பாராயணம்<br>காஞ்சி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்த்ர சேகரரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தீ |
| 12-06-2025 | வியாழன் | மூலம் தேர் — மூலம் வேத பாராயணம்<br>காஞ்சி ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஆஸ்ரம ஸ்வீகார தினம் |
| 14-06-2025 | சனி | உத்ராடம் தேர் — உத்ராடம் வேத பாராயணம் |

16-05-2025 ; 23-05-2025 ; 30-05-2025 06-06-2025 ; 13-06-2025
வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

ப்ரதீபப் பேழை

# ஆதிசங்கரரின் விவேக சூடாமணி



ஆதிசங்கரர் வேதாந்தத்தை விளக்க உபநிஷத் பாஷ்யமும் பகவத் கீதா பாஷ்யமும் ப்ரம்ம ஸூத்ர பாஷ்யமும் எழுதி ஸநாதன தர்மத்தை ஸ்தாபித்தார். பாஷ்யங்களைப் படித்து அறிய, திறமை குறைந்தவர்களுக்கும் அவகாசம் இல்லாதவர்களுக்கும் பயன்படும் வகையில் சிறியதும் பெரியதுமான ப்ரகரண கிரந்தங்கள் என்னும் பல நூல்களையும் அருளியிருக்கிறார். அவற்றுள் விவேக சூடாமணியை முதல் முதலில் எழுதியதாய்க் கூறுவர். தலையில் அணியும் ரத்னம் சூடாமணி. அது எல்லா ஆபரணங்களிலும் சிறந்து ஆத்மாநாத்ம விவேகத்தைப் புகட்டுவதில் இந்த நூல் மிகச் சிறந்து விளங்குவதால் இதற்கு விவேக சூடாமணி என்னும் பெயர் பொருந்துவதாயிற்று.

சமீப காலத்தில் சிருங்கேரி பீடாதிபதியாயிருந்த ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் இதற்கு மிகச் சிறப்பான பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள்.

விவேக சூடாமணியில் 580 சுலோகங்கள் இருக்கின்றன. இதில் ஸ்ரீ சங்கரர் ஆத்ம தத்துவத்தையும் அதை அறிந்து உய்யும் மார்க்கத்தையும் பல உதாரணங்களுடன் ஒரு சீடனுக்குக் குரு போதிக்கும் பாணியில் சம்பாஷணை முறையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஜீவராசிகளுக்கு மானிடப் பிறவி, முக்தியில் ஆசை, மகாபுருஷர்களை அடைதல் ஆகிய இந்த மூன்றும் அடைவதற்கரியவை. தெய்வத்தின் அருள் காரணமாகத்தான் இவற்றை அடைய இயலும். சாஸ்திரங்களைப் படித்தாலும், தேவதைகளை வழிபட்டாலும், பலவிதமான கருமங்களைச் செய்தாலும் ஆத்மாநாத்ம விவேகம் இல்லாமல் முக்தி கிட்டாது. ஆகையால் ஒருவன் தகுந்த குருவை அடைந்து அவருடைய உபதேசத்தால் ஈடேற வேண்டும். வேதத்தை நன்றாய் உணர்ந்தவரும், பாவமற்றவரும், ஆசை வாய்ப்பட்டு நலியாதவரும் பிரம்மஞானியும், காரணம் ஏதுமின்றி ஜீவராசிகளிடம் கடல் போன்ற கருணையுடையவரும் தம்மை வணங்கும் நல்லவர்களுக்கு உளங்கலந்த உறவினரும் எவரோ அவரே சிறந்த குரு. அத்தகைய குருமார்கள் மன அமைதியுள்ளவர்களாகவும் வஸந்த காலத்தைப் போல் உலகுக்கு நன்மை செய்பவர்களாகவும் பயங்கரமான பிறவிக் கடலைத் தாங்கள் தாண்டியவர்களாகவும் உலகில் இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் இருந்தார்கள்; இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மகான்கள் இல்லை' என்று சிலர் கருதுகிறார்கள். அது தவறு. இந்த காலத்திலும் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டு கொள்ள நமக்கு அறிவும் அவாவும் இல்லாததுதான் குறை.

எல்லா விதத்திலும் முயற்சி செய்து பிறவித் தளைகளினின்று விடுபடுவதற்கு, ஒருவன் நோய் முதலியவற்றினின்று விடுபடுவதற்கு முயல்வது போல் தீவிரமாய் முயல வேண்டும். சாஸ்திரம் எல்லையில்லாதது. அறியவேண்டியது அதிகம். காலமோ குறைவு. இடையூறுகள் பல. எது ஸாரமாயுள்ளதோ அதை நீர் கலந்த பாலிலிருந்து பாலை மட்டும், ஹம்ஸம் கிரகிப்பது போல் கிரகிக்க வேண்டும்.

முக்திக்கு முதல் படி, நிலையற்ற பொருள்களில் தீவிரமான வைராக்கியம். விஷயங்களை விஷம் போல் ஒதுக்கிப் புறக் கரணங்களையும் அகக் கரணங்களையும் பொறுமையுடன் அடக்க வேண்டும். பிறகு, ஆசை வாய்ப்பட்டுச் செய்யும் கருமங்களை யெல்லாம் துறக்க வேண்டும். அதன் பின், குருவிடமிருந்து உபதேசம் பெற்று அதைச் சிந்தித்து இடைவிடாமல் தியானம் செய்யப் பழகி ஸமாதி நிலையை அடைய வேண்டும். அதனால் அறிவாளியானவன் இங்கேயே முக்தியின்பத்தை அடைவான்.

'நான்' என்னும் உணர்வுக்கு ஆதாரமானதும் இயற்கையாக என்றும் உள்ளதுமான பிரம்மம் ஒன்று இருக்கிறது. விழிப்பு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளுக்கும் ஸாக்ஷியாய் இருந்து கொண்டு அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற ஐந்து கோசங்களினின்றும் வேறாக அது உள்ளது. மூலப் பிரகிருதியினின்றும் அதன் மாறுபாடுகளினின்றும் வேறுபட்டதாகவும் பரிசுத்தமான ஞான இயல்புடையதாகவும் ஸூக்ஷ்மமாகவும் ஸ்தூலமாகவும் உள்ள இவ்வுலகைப் பிரகாசித்துக் கொண்டும் 'நான், நான்' என்று அனைவராலும் உணரப்படுவதாயும் புத்தியின் ஸாக்ஷி வடிவில் அது விளங்குகிறது. தன்னுடைய அந்த உண்மையான வடிவை ஒருவன் அறிந்து பாவமற்றவனும், மாசற்றவனும், சாவற்றவனும் ஆகிறான். இந்த நிலையை உணர்வதல்லாமல் முக்திக்கு வேறு வழியில்லை.

ஜாதி, மதம், குலம், கோத்திரம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டதும், பெயர், வடிவம், குணம், குற்றம் ஆகியவை அற்றதும், இடம், காலம், பொருள் முதலியவற்றைக் கடந்ததுமாகிய பிரம்மம் எதுவோ, அதுவே நான் என்று புத்தியில் ஒருவன் அநுஸந்தானம் செய்ய வேண்டும். உலகைப் பின்பற்றிச் செல்வதையும் நூல்களைப் பின்பற்றிச் செல்வதையும் கூட விட்டொழித்து ஆத்மாவில் பொய்யாகக் கற்பித்துள்ள அத்தியாஸம் அனைத்தையும் ஒழிக்க வேண்டும். உறக்கத்தாலும், உலக வியாபாரத்தாலும், சப்தம் முதலிய விஷயாநுபவத்தாலும் ஏற்படும் ஆத்ம மறதிக்குச் சிறிதும் அவகாசம் கொடுக்காமல் உண்மையான ஆத்ம ஸ்வரூபத்தை இடைவிடாது சிந்தித்துத் தன்மேல் ஏற்றிக் கொண்ட வேஷத்தை நடிகன் களைவதுபோல் பொய் உடலைத் தான் என்று எண்ணுவதை விட்டுவிட வேண்டும்.

கேட்பதைவிடச் சிந்திப்பது நூறு மடங்கு சிறந்தது. சிந்திப்பதைக் காட்டிலும் ஆத்ம தத்துவத்தை உணர்ந்து சித்தத்தில் நிலைநிறுத்துவது லக்ஷம் மடங்கு சிறந்தது. நிர்விகல்ப ஸமாதி அளவிலாச் சிறப்புடையது. எப்படித் தங்கத்தை நன்றாய் நெருப்பில் சுத்தம் செய்தால், அழுக்கு நீங்கித் தனக்கு இயல்பான பிரகாசத்தை அது அடையுமோ, அவ்வாறே மனம் தியானத்தால் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களின் அழுக்கை ஒழித்துப் பரிசுத்தமான தத்துவ நிலையை அடைகிறது. வாக்கை மனத்தில் ஒடுக்கி, மனத்தைப் புத்தியில் ஒடுக்கி, புத்தியை ஸாக்ஷியான கூடஸ்தனிடம் ஒடுக்கி, அவனையும் குணங்களுக்கும் எண்ணங்களுக்கும் அப்பாற்பட்ட பரிபூர்ண ஆத்மாவில் ஒடுக்கி ஒருவன் ஒப்பற்ற சாந்தியை அடைகிறான்.

பரதத்துவத்தின் அறிவு உதித்தபின் ஸத்ரூபமாயுள்ள பிரம்மத்தில் கற்பனையாகிய உலகம் இல்லவே இல்லை. கயிற்றில் தோன்றிய பாம்பு உண்மையில் முக்காலத்தும் இல்லை; இருந்து போகவுமில்லை. ஒருபோதும் இல்லவே இல்லை. அப்படி இந்தத் துவைதப் பிரபஞ்சம் வெறும் மாயையே. இரண்டற்ற பிரம்மமே உண்மையில் உளது. இந்தப் பிரம்மத்துடன் கலந்தவன், பிரம்ம வடிவாகவே எப்போதும் இருந்து கொண்டு வெளி விஷயங்களைப் பொருட்படுத்தாதவனாக, உறங்குபவனைப் போலும் சிறு குழந்தையைப் போலும் பிறர் கொடுக்கும் அன்னம், பானம் முதலிய போக்கிய வஸ்துக்களை மட்டும் அநுபவிப்பவனாய், அளவில்லாத பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயனாகிய மோக்ஷ ஆனந்தத்தை எய்தியவனாய்ப் பிறவிப்பயனை அடைந்த பாக்கியவானாய், எல்லோராலும் பூஜிக்கத் தகுந்தவனாய் விளங்குவான். அவனையே ஜீவன் முக்தன் என்பார்கள். அவன் பணமில்லாதவனாயினும் எப்போதும் ஸந்தோஷமுள்ளவன்; பிறர் துணையில்லாதவனாயினும் மிகுந்த பலமுள்ளவன்; போகங்களை அநுபவிக்காதவனாயினும் திருப்தி நிறைந்தவன்; ஒப்பற்றவனாயினும் எங்கும் ஒக்க நோக்குபவன். ஜீவாத்மாவுக்கும் பிரம்மத்துக்கும் பேதத்தையும், பிரம்மத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் பேதத்தையும் அவன் ஒருபோதும் காண்பதில்லை. அவனுக்கு முன்போல் உலகில் இன்ப துன்ப அநுபவம் கிடையாது. இருக்குமேயானால் அவன் வெளிப் போக்குடைய இந்திரியங்களுக்கு வசமானவன்; பிரம்மானந்தத்தை அடைந்தவனல்ல.

ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை எய்திய சிஷ்யன் குருவிடம் பின்வருமாறு தன் அநுபவத்தைப் பற்றிக் கூறுகிறான்: '' பிரம்மமும், ஆத்மாவும் ஒன்றேயாகி விட்டபோது புத்தியானது காணாமற் போய்விட்டது. செயலின் முனைப்புக் கரைந்து விட்டது. இது என்று நேராகக் காண்பதையோ, இது அன்று என்பதையோ நான் அறியவில்லை. அது என்னவென்றோ எப்படிப்பட்டதென்றோ அறியவில்லை. உள்ளது என்பதை மட்டும் உணர்கிறேன். அதைச் சொல்லால் வர்ணிக்க அளவு கடந்த இன்பம் அந்த நிலையில் இயலவில்லை. மனத்தால் நினைப்பதற்குங்கூட முடியாது. அங்கே மனம் ஸமுத்திரத்தில் விழுந்து கரைந்து போன மழைப் பனிக்கட்டியின் நிலையை அடைந்துவிட்டது. எவருடைய கடைக்கண் பார்வையாகிற குளிர்ச்சியான சந்திரப் பிரகாசம் விழுந்ததால் பிறவியாகிற கடும் வெயிலின் சிரமம் தீர்ந்து நான், அளவுகடந்த பெருமை வாய்ந்த ஆனந்தமானதும், அழிவற்றதுமான ஆத்ம தத்துவத்தை அடைந்தவன் ஆனேனோ அந்தக் குருவுக்கு நமஸ்காரம்.

**இதுவே 'விவேக சூடாமணியின்' ஸாரம்.**

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி



**மார்ச் 24** - ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் பால்குண பகுள தசமி சாந்த்ரமான ஜன்ம திதியானபடியால் விசேஷ ஹோமங்கள் பூர்ணாஹுதி மற்றும் கலசாபிஷேகங்கள் நடைபெற்றன. தொடர்ந்து ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம், ஸ்ரீ ஞான பிரசன்னாம்பிகா சமேத ஸ்ரீ காளஹஸ்திஸ்வர சுவாமி தேவஸ்தானம் மற்றும் பல்வேறு திருக்கோவில்களிலிருந்து வரப்பெற்ற பிரசாதங்கள் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளுக்கு வழங்கப்பட்டன. முன்னதாக காலையில் விஸ்வரூப தரிசனத்தின் போது தீப ஹாரத்திகள் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜைக்கு புறப்பட்டார்கள்.

**மார்ச் 25** - பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஸ்ரீ ஞான பிரசன்னாம்பிகை சமேத ஸ்ரீ காளஹஸ்திஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்த போது, தேவஸ்தான செயல் அலுவலர், துணை செயல் அலுவலர், கோவில் அலுவலர்கள், அர்ச்சகர்கள், பாராயணதாரர்களால் பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் நேராக அம்பாள் சந்நிதிக்கு சென்று தரிசனம் செய்து கொண்டு தொடர்ந்து ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ நடராஜர் மற்றும் ஸ்ரீ சனீஸ்வரர் சந்நிதிகளுக்கும் சென்று அபிஷேக அலங்கார அர்ச்சனைகளை முடித்து ஸ்ரீ காளஹஸ்திஸ்வரர் சந்நிதியிலும் வேத மந்திரங்கள் முழங்க தரிசனம் செய்தருளினார்கள். இதனை தொடர்ந்து ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளுக்கு சுவாமி, அம்பாள் சேஷ வஸ்திரத்துடன் திருக்கோவில் மரியாதைகள் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர்

தேவஸ்தான செயல் அலுவலர், மற்றும் கோவில் அலுவலர்கள், அர்ச்சகர்கள் ஆகியோர்கள் ஸ்ரீ மடத்தின் சார்பில் கௌரவிக்கப்பட்டார்கள்.

**மார்ச்** 26 - இன்று திருவிளக்கு பூஜை ஸ்ரீ காளஹஸ்தி முகாமில் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

**மார்ச்** 27 - இன்று காலை ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜையை தொடர்ந்து மாலை பிரதோஷ பூஜையும் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் நடத்தி அருளினார்கள்.

**மார்ச்** 30 - ஸ்ரீ மடம் முகாம் திருப்பதிக்கு வந்து சேர்ந்து கடந்த 29ம் தேதி முதல் யுகாதி மற்றும் வஸந்த நவராத்திரி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இன்று வஸந்த நவராத்திரி ஹோமம், பூஜை, ஹாரத்தி பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் பாதுகா மண்டப முகாமில் நடைபெற்றன.

**ஏப்** 6 - ஸ்ரீ ராம நவமி பூஜை, நவராத்ரி, யாக சாலையில் ஸ்ரீ வித்யா ஹோமம் பூர்ணாஹுதி ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள் அனுக்ரஹத்துடன் அவர் தம் முன்னிலையில் நடைபெற்றன.

**ஏப்** 7 - ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தி அருளினார்கள்.

**ஏப்** 10 - மாலை பிரதோஷ பூஜை திருப்பதி மஹா பாதுகா மண்டப ஸ்ரீ மடம் முகாமில் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் நடத்தி அருளினார்கள்.

தொடர்ந்து 11-04-2025 அன்று நைமிஷம் குருகுலத்தில் விஸ்வநாத தியான மண்டபத்தை தேசிய சம்ஸ்க்ருத சர்வ கலா சாலை வளாகத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் துணைவேந்தர், பேராசிரியர், G. S. R. கிருஷ்ணமூர்த்தி, பதிவாளர் திரு. K. V. நாராயண ராவ், பல்வேறு பள்ளிகளின் முதல்வர்கள், பொறுப்பு நிதி அலுவலர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள், சர்வகலா சாலை மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

**ஏப் 14 -** ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத மூலாம்னாய சர்வக்ஞ பீட ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்தர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் ஊத்துக்கோட்டை தாலுக்காவில் உள்ள தண்டலம் என்னுமிடத்தில் நடை பாதை வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட குளத்தை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திருமிகு K. R. ஸ்ரீராம் பிரதம விருந்தினராக வந்திருந்து அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**ஏப் 16 -** பக்தர் ஒருவரால் வழங்கப்பட்ட வைரங்கள் பதித்த குஞ்சிதபாதம் பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் தெய்வீக அனுக்ரஹத்துடன் சிதம்பரம் ஸ்ரீ நடராஜ பெருமானுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சிதம்பரம் திருக்கோவில் தீக்ஷிதர்கள் இந்த விசேஷ ஆபரணத்தை பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் பெற்றுக் கொண்டார்கள். இத்தருணத்தில் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் பூஜ்ய ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகளுக்கு ஸ்ரீ நடராஜர் திருக்கோவில் மீதுள்ள விசேஷ பற்று, பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு சமர்ப்பித்த ரத்னங்கள் இழைத்த குஞ்சித பாதம், ஸ்ரீ நடராஜர் திருக்கோவில் வளாகத்தில் அமைந்துள்ள பாண்டிய நாயகம் சந்நிதி கும்பாபிஷேகம் ஆகியவைகளை நினைவு கூர்ந்து விவரித்தார்கள். மேலும் பழமையான கலாசாரத்தை காக்கும் பொருட்டு காஞ்சி மடத்தின் மூலம் நடத்தப்படும் கல்வி பணிகள் குறித்தும் குறிப்பிட்டார்கள்.

முன்னதாக காலையில் பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் திருமலை ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்தார்கள். விசேஷ பூஜைகள், சேவைகள் நடைபெற்றன. தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் திருமலையில் உள்ள ஸ்ரீ சங்கர மடத்திற்கும் விஜயம் செய்தார்கள்.

மேலும் புதுடெல்லி ஸ்ரீ காருண்ய மகா கணபதி திருக்கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேக நிகழ்ச்சியினை முன்னிட்டு ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள்.

**ஏப் 24 -** 23-04-2025 மாலை காஞ்சி சர்வ தீர்த்த குளக்கரையில் வேத மந்திரங்கள் முழங்க பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளுக்கு

சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான பிரசாதம் வழக்கப்படி சமர்ப்பிக்கப்பட்டது. தொடந்து ஸ்ரீ மடம் வாயிலில் பூர்ண கும்ப மரியாதைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் பூஜ்ய ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் பிருந்தாவனங்களில் ஹாரத்தி செய்வித்து அருளினார்கள்.

**ஏப் 25** - மாலை பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் பிரதோஷ பூஜை செய்தருளினார்கள்.

28-04-2025 முதல் ஏழு நாட்கள் ஸ்ரீ சியாமா சாஸ்திரி 13வது சங்கீத மஹோத்ஸவம் காஞ்சி சங்கர மடத்தில் ஸ்ரீஸ்ரீ காஞ்சி பரமாச்சார்யார் மற்றும் ஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ப்ருந்தாவனங்களின் முன்னிலையில் விமர்சையாக நடைபெற்றது.

**ஏப் 30** - அக்ஷய திருதியை நன்னாளில் 2533 ஆண்டு பழமையான காஞ்சி மடத்தின் ஸந்யாஸ ஸ்வீகார மஹோத்ஸவம் ஸ்ரீ சத்ய சந்த்ரசேகரேந்திர சரஸ்வதி என்ற தீக்ஷா நாமத்துடன் இளைய மடாதிபதியாக பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் அனுக்ரஹித்தார்கள்.

முன்னதாக சந்நியாச கார்ய க்ரமங்கள் அதிகாலை 5.00 மணி முதல் துவங்கப்பட்டது. பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீ மடத்திலிருந்து பாத யாத்திரையாக புறப்பட்டு ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலுக்கு 5.30 மணிக்கு வந்து சேர்ந்தார்கள். கோவில் வாயிலில் பிரம்மாண்டமான முறையில் பூர்ண கும்ப மரியாதைகளுடன் ஸ்ரீஸ்ரீ பெரியவா வரவேற்கப்பட்டார்கள். அது சமயம் விண்ணை பிளக்கும் வகையில் பல வண்ண வாண வேடிக்கைகள் நிகழ்ந்தன.

திருக்கோவிலின் பஞ்ச கங்கா தீர்த்த கரையில் மங்கள விநாயகர் சந்நிதியில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்யார் அலங்கார மேடைக்கு வருகை தந்து சந்நியாச ஸ்வீகர்ண மஹோத்ஸவத்தை துவங்கி வைத்தார்கள். ஸ்ரீ கணேச சர்மா டிராவிட்க்கு பஞ்ச கங்கா தீர்த்தத்தில் வேத கோஷங்கள் முழங்க ஸ்நானம் முடித்த

பின்னர் காஷாய வஸ்த்ரம், தண்டம், கமண்டலம், ஆஸனம் அளித்து மஹாவாக்ய உபதேசமும் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் வழங்கினார்கள். சுதர்சன சாலிக்ராமம் ஒன்று இளைய சுவாமிஜீயின் சிரசில் வைக்கப்பட்டு சங்கினால் அபிஷேகம் செய்விக்கப்பட்டது. தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஐந்து வேறுபட்ட மொழிகளில் உலக மக்களுக்கு சக்தி மிக்க செய்தியாக ''சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி'' என்ற தீக்ஷா நாமத்தை வழங்கி அருளினார்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கோயிலின் உள்ளேயும், பஞ்ச கங்கா குளக்கரையை சுற்றியும் குழுமியிருந்து இரு ஆச்சார்ய பெருமக்களையும் ஒருங்கே தரிசித்ததுடன் ''ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிக்கு ஜே என்றும், ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிக்கு ஜே'' என்றும் கர கோஷங்கள் முழங்கினார்கள். அது சமயம் மங்கள வாத்யங்களும், வாண வேடிக்கைகளும் பரவச மூட்டுபவையாக அமைந்தன.

தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய பெருமக்கள் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் சந்நிதிக்கு எழுந்தருளி விசேஷ பூஜைகள் நடைபெற்றன. ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் சந்நிதியில் பரிவட்டங்களும், பிரசாதங்களும் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய பெருமக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

பின்னர் இரு ஆச்சார்யர்களும் பாத யாத்திரையாக ஸ்ரீ மடத்திற்கு எழுந்தருளினார்கள். பாத யாத்திரையில் வழி நெடுகிலும் பூர்ண கும்ப மரியாதைகள் மெய் அன்பர்களால் இரு ஆச்சார்ய பெருமக்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜையை தொடர்ந்து ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் பிருந்தாவனத்திலும், ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பிருந்தாவனத்திலும் பூஜைகளும், ஹாரத்தியும் நடைபெற்றன. அதுசமயம் பல்வேறு திருக்கோவில் பிரசாதங்களும், பல்வேறு பகுதியில் உள்ள அதிஷ்டானங்களிலிருந்து பிரசாதங்களும், தமிழ்நாடு மட்டுமின்றி, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா பகுதியிலிருந்தும் பிரசாதங்கள் வரப்பெற்று இரு ஆச்சார்யர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த சந்நியாச ஸ்வீகார மஹோத்ஸவத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஸ்ரீ R. N. ரவி அவர் தம் மனைவியுடனும், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஸ்ரீ K. R. ஸ்ரீராம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ சுப்ரமண்யம் சுவாமி மற்றும் பல்வேறு பிரமுகர்களும் அனைத்து பகுதிகளிலிருந்தும் வந்திருந்து விழாவை சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சி பல்வேறு அலைவரிசைகளில் நேரிடை ஒளிபரப்பு மற்றும் நிகழ்ச்சியை நேரிடையாக காண இயலாதவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த்து.

இப்பெருவிழாவை முன்னிட்டு பல்வேறு இடங்களில் அன்னதானங்கள், ராஜவீதி, அன்னக்கூடம் ஆகிய இடங்களிலும் நடைபெற்றன.

2534வது சங்கர ஜெயந்தி மஹோத்ஸவம் நடைபெறவுள்ள இத்தருணத்தில் ஸந்நியாச ஸ்வீகார மஹோத்ஸவம் நடைபெற்றுள்ளது ஸ்ரீ காஞ்சி மடத்தின் வரலாற்றில் சிறப்புமிக்க முக்கிய நிகழ்வாக அமையப் பெற்றுள்ளது.

**மே** 2 - ஏப்ரல் 27ல் தொடங்கி நடைபெற்று வரும் சங்கர ஜெயந்தி மஹோத்ஸவத்தின் முக்கிய தினமான இன்று அவதார கட்டம் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து மாலை வேத ரக்ஷண நிதி டிரஸ்ட் மூலம் வேதம் பயின்று தேர்வு முடித்த வித்யார்த்திகளுக்கு பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்யர்களால் சான்றிதழ்கள் வழங்கி ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மாலை ஸ்ரீ ஆதிசங்கரர் திருவுருவப் படம் நான்கு ராஜ வீதிகளிலும் தங்க ரதத்தில் மங்கள வாத்தியங்கள், வேத கோஷங்களுடன் ஊர்வலம் நடைபெற்றது.

**மே** 2 - பூஜ்ய ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் பாத யாத்திரையாக தேனம்பாக்கம் சிவாஸ்தானத்திற்கு விஜயம் செய்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளுடன் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளும் கலந்து கொண்டார்கள். ஊர்வலத்தில் பெருவாரியான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். வழியெங்கும் மெய்யன்பர்கள் ஸ்ரீ ஆச்சார்யர்களை பூர்ண கும்ப மரியாதைகள், மலர் மாலைகள் சமர்ப்பித்து வணங்கினார்கள். சிவாஸ்தானத்தில் இரு ஆச்சாரியர்களும் மங்கள வாத்தியங்கள் வேத கோஷங்கள் முழங்க பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்கள். இந்நிகழ்ச்சியில் பக்தர்கள் பெருவாரியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# சுக நாஸ உபதேசம்

ஸ்ரீமதி விசாலாக்ஷி சங்கரன்

சுமார் 7 ஆவது நூற்றாண்டில் பிறந்தவர் பாணபட்டர். மிகச்சிறந்த கவி **'பாணோச்சிஷ்டம் ஸர்வம்'** என்று கவிகளாலும் பண்டிதர்களாலும் கொண்டாடப்பட்டவர். **'கௌடீ'** ரீதியில் எழுதப்பட்ட அவரது நூல்கள் ஜகத் ப்ரசித்தமானவை. வாக் சாதுர்யம், நீண்ட ஸமாஸங்கள், அத்புதமான கற்பனை வளம் என்று பல வகையான சிறப்புகளைக் கொண்டவை அவரது காவ்யங்கள். **'சண்டீ சதகம்'** என்னும் க்ரந்தத்தில் சக்தியின் புகழைப் பாடுகிறார். **'ஹர்ஷ சரித்ரம்'** என்னும் நூலில் ஹர்ஷ அரசனின் சரித்ரத்தைக் கூறுகிறார். **'காதம்பரி'** என்னும் உரை நடைக் காவ்யத்தில் மூன்று தலை முறைக் காதலை மிக அழகாக விவரிக்கிறார். அந்த காதம்பரியில் தான் சுக நாசர் என்னும் ரிஷி சந்த்ராபீடன் என்னும் இளவரசனுக்கு வாழ்வியல் தத்வங்களை மிக அழகாக உபதேசிக்கிறார். இதை அனைவரும் முக்யமாக இளைஞர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக மொழி பெயர்த்துத் தருகிறோம். மூலத்தையும் ராகத்தோடு படிக்கவும். மிக ரஸமாக இருக்கும்.

(ஆர்)

### राज्ञां स्वभावः

**एवंविधया चापि अनया दुराचारया कथमपि दैववशेन परिगृहीताः विक्लवाः भवन्ति राजानः । सर्वाविनयाधिष्ठानतां च गच्छन्ति ।**

இவ்வாறு கெட்ட குணங்களை உடைய லக்ஷ்மியனிடத்தில் தவறுதலாகப் பிடிப்பட்ட அரசர்கள் தன்வசத்தில் இல்லாதவர்களாக ஆகிறார்கள். மேலும் கெட்ட செயல்களுக்கு இருப்பிடமாக ஆகிறார்கள்.

**तथा हि अभिषेकसमये एव एषां मङ्गलकलशजलैः इव प्रक्षाल्यते दाक्षिण्यम् । अग्निकार्यधूमेन इव मलिनीभवति हृदयम् । पुरोहितकुशाग्रसंमार्जनीभिः इव अपनीयते क्षान्तिः । उष्णीषपट्टबन्धेन इव आच्छाद्यते जरागमनस्मरणम् । आतपत्रमण्डलेन इव अपवार्यते**

**परलोकदर्शनम् । चामरपवनैः इव अपह्रियते सत्यवादिता ।**

**आतनोति । बलोपचयम् आहरन्ती अपि लघिमानम् आपादयति । अमृतसहोदरा अपि कटुकविपाका । विग्रहवती अपि अप्रत्यक्षदर्शना । पुरुषोत्तमरता अपि खलजनप्रिया ।**

அது எப்படி என்றால் - முடி சூடும் சமயத்தில், லக்ஷ்மியின் பிடியில் அகப்பட்ட அரசர்களுக்கு எவ்விதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று கவி இங்குக் கற்பனை செய்கிறார். மங்கலமான கலச ஜலங்களினால் பரிவு குணம் அலம்பி விலக்கப்படுகிறது. அக்னி காரியத்தினால் எழும்பும் புகையினால் அவர்களின் இருதயம் அழுக்காக்கப்படுகிறது. அரசர்களின் பொறுமை தர்பப்புல் நுனிகள் எனும் துடைப்பங்களால் அகற்றப் படுகின்றன. தலப்பாகையை கட்டும் சமயத்தில் மூப்பு வரும் நினைப்பும் மூடப்படுகிறது. வெண்கொற்றக் குடையினால் பரலோகத்தின் தரிசனம் தடுக்கப்படுகிறது. சாமரங்களின் காற்றுகளினால் சத்தியம் பேசும் தன்மை விலகுகிறது.

**वेत्रदण्डैः इव उत्सार्यन्ते गुणाः । जयशब्दकलकलैः इव तिरस्क्रियन्ते साधुवादाः । ध्वजपटपल्लवैः इव परामृष्यते यशः ।**

பிரம்புக் கழிகளால் நற்குணங்கள் அகற்றப்படுகின்றன. போற்றி போற்றி எனும் கலகல சப்தங்களினால் நல்லோர்களின் சொற்கள் அமிழ்ந்து விடுகின்றன. கொடித்துணிகளால் புகழ் துடைக்கப்படுகிறது.

**तथा हि केचित् श्रमवशशिथिलशकुनिगलपुटचपलाभिः खद्योतोन्मेषमुहूर्तमनोहराभिः मनस्विजनगर्हिताभिः सम्पद्भिः प्रलोभ्यमानाः धनलवलाभावलेपविस्मृतजन्मानः अनेकदोषोपचितेन दुष्टसृजा इव रागावेशेन बाध्यमानाः विविधविषयग्रासलालसैः पञ्चभिः अपि अनेकसहस्रसंख्यैः इव इन्द्रियैः आयास्यमानाः प्रकृतिचञ्चलतया लब्धप्रसरेण एकेन अपि शतसहस्रताम् इव उपगतेन मनसा आकुलीक्रियमाणाः विह्वलताम् उपयान्ति ।**

உயர்ந்த மனிதர்களால் வெறுக்கத்தக்கதான இந்தச் செல்வங்கள், களைப்பினால் சிதிலமான பறவைகளின் தொண்டைகள் போல் மிகவும்

சஞ்சலமாகவும், மின்னல்கள் போல் சற்றே அழகாகவும் இருப்பவை. இவ்வாறான செல்வங்களினால் ஈர்க்கப்பட்ட சில அரசர்கள் செல்வத்தின் ஒரு துளியினால் அடைந்த இறுமாப்பின் காரணமாகத் தனது பிறப்பை மறந்து விடுகிறார்கள். பலவிதமான தோஷங்களினால் வளர்க்கப்பட்ட கெட்ட ரத்தத்தினால் எவ்வாறு ஒரு மனிதன் அழிவை அடைகிறானோ, அவ்வாறு கெட்ட குணங்களினால் வளர்ந்த அரசர்கள் பேராசையுடன் இருக்கிறார்கள். புலன்கள் ஐந்தாக இருந்த பொழுதிலும் ஆயிரக்கணக்கான புலன்கள் இருப்பது போலும், மனது ஒன்றாக இருந்த பொழுதிலும் பல துறைகளில் சென்றதனால் ஆயிரக்கணக்காக மாறியது போலும் தன்னை ஆயாசப்படுத்திக் கொண்டு செயலிழந்து விடுகிறார்கள்.

**ग्रहैः इव गृह्यन्ते । भूतैः इव अभिभूयन्ते । मन्त्रैः इव आवेश्यन्ते । सत्त्वैः इव अवष्टभ्यन्ते। वायुना इव विडम्ब्यन्ते । पिशाचैः इव ग्रस्यन्ते । मदनशरैः मर्माभिहताः इव मुखभङ्गसहस्राणि कुर्वते । धनोष्मणा पच्यमानाः इव विचेष्टन्ते ।**

கோள்களால் பிடிக்கப்பட்டவர்கள் போலும், பூதங்களால் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள் போலும், மந்திரங்களினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் போலும், மிருகங்களால் தடுக்கப்பட்டவர்கள் போலும், காற்றினால் ஆட்டுவிக்கப்பட்டவர்கள் போலும், பிசாசுகளால் பிடிக்கப் பட்டவர்கள் போலும் நடந்து கொள்கிறார்கள். மன்மதன் அம்புகளினால் இருதய மர்மங்களில் அடிக்கப் பட்டவர் போல் ஆயிரக்கணக்கான முக கோணல்களை செய்கிறார்கள். செல்வத்தின் சூட்டினால் சமைக்கப்பட்டவர்கள் போல் துடிக்கிறார்கள்.

**गाढप्रहाराहताः इव अङ्गानि न धारयन्ति । कुलीराः इव तिर्यकब परिभ्रमन्ति । अधर्मभग्नगतयः पङ्गवः इव परेण सञ्चार्यन्ते । मृषावादविपाकसञ्जातमुखरोगाः इव अतिकृच्छ्रेण जल्पन्ति। सप्तच्छदतरवः इव कुसुमरजोविकारैः आसन्नवर्तिनां शिरःशूलमब उत्पादयन्ति ।**

வலுவான அடியினால் தாக்கப்பட்டவர்கள் போல் தங்கள் அங்கங்களைத் தானே தாங்குவதற்கு இயலாதவர்களாக ஆகிறார்கள். நண்டுகள் போல் ஒரு பக்கமாகச் சாய்ந்து (பக்ஷபாதத்துடன்) நடக்கிறார்கள். அதர்மத்தை

இழந்தவர்களாக நடையில் தடுமாற்றம் கொண்ட முடவர் போல் மற்றவர்களால் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். பொய் பேசுவதனால் வாயில் புண்களுடைவர் போல் பெரும் பிரயாசத்துடன் பிதற்றுகிறார்கள். புஷ்ப மகரந்த தூள்களால் சப்தச்சத (ஏழிலை) மரங்கள் எவ்வாறு பக்கத்தில் நிற்பவர்க்கு தலைவலியை உண்டாக்குகிறதோ, அதுபோல் தங்களின் ரஜோகுணத்தால் உருவாகும் கண்ணசைவுகளால் பக்கத்தில் வருவோருக்கு தலைவலியை தூண்டுகிறார்கள்.

**आसन्नमृत्यवः इव बन्धुजनम् अपि न अभिजानन्ति । उत्कम्पितलोचनाः इव तेजस्विनः न ईक्षन्ते । कालदष्टाः इव महामन्त्रैः अपि न प्रतिबुध्यन्ते । जातुषाभरणानि इव सोष्माणं न सहन्ते ।**

மரணத்தின் தருவாயில் இருப்பவர்கள் போல் உறவினரை அடையாளம் கொள்வதில்லை. கண் நோய் கொண்டவர் போல் பிரகாசம் கொண்டவர்களைப் பார்ப்பதில்லை. கால சர்ப்பத்தினால் கடிக்கப் பெற்றவர் போல் மகா மந்திரங்களினாலும் விழிப்பதில்லை. மெழுகினாலான ஆபரணங்கள் போல் உஷ்ணப் பொருட்களை (சுறுசுறுப்பான மனிதர்களை) சகிப்பதில்லை.

**दुष्टवारणाः इव महामानस्तम्भनिश्चलीकृताः न गृह्णन्ति उपदेशम् । तृष्णाविषमूर्च्छिताः कनकमयम् इव सर्वं पश्यन्ति । इषवः इव पानवर्धिततैक्ष्ण्याः परप्रेरिताः विनाशयन्ति । दूरस्थितानि अपि फलानि इव दण्डविक्षेपैः महाकुलानि शातयन्ति ।**

மதம் பிடித்த யானைகள் தூணில் கட்டப்பட்ட பொழுதிலும் யானைப்பாகன் உபதேசத்தை எவ்வாறு கேட்பதில்லையோ, அதுபோல் பெரும் கோபம் எனும் தூணில் கட்டப்பட்டு இந்த அரசர்களும் நல்ல உபதேசங்களை கேட்பதில்லை. பேராசை எனும் நஞ்சினால் மூர்ச்சை அடைந்த இவர்கள் எல்லாவற்றையும் தங்கமயமாகப் பார்க்கிறார்கள். நன்கு கூர்மைப் பெற்ற அம்புகள் எவ்வாறு மற்றவர்களால் ஏவப்படுகின்றனவோ, அதுபோல் இந்த அரசர்களுடைய கொடூரத்தனம் மதுவினால் வளர்க்கப்பட்டு, மற்றவர்களால் தூண்டப்பட்டவர்களாக அழிவை அடைகிறார்கள். உயரத்தில் இருக்கும்

பழங்களை எவ்வாறு தடியால் அடித்து விழ்த்துகிறோமோ, அதுபோல், இவர்கள் உயர்ந்த குலங்களை வீழ்த்துகிறார்கள்.

**अकालकुसुमप्रसवाः इव मनोहराकृतयः अपि लोकविनाशहेतवः । श्मशानाग्नयः इव अतिरौद्रभूतयः । तैमिरिकाः इव अदूरदर्शिनः । उपसृष्टाः इव क्षुद्राधिष्ठितभवनाः ।**

பருவமற்ற காலத்தில் மலரும் மலர்களைப் போல் அழகான உருவங்களைக் கொண்டவர்களாக இருப்பினும் உலக அழிவிற்கு காரணமாகிறார்கள். சுடுகாட்டின் நெருப்பு எவ்வாறு கொடூரமான சாம்பலை உற்பத்திச் செய்கின்றனவோ அதுபோல் இவர்களும் கொடூரமான செயல்களைச் செய்கிறார்கள். கண்புரை கொண்டவர்கள் போல் இவர்கள் தொலைநோக்கு பார்வையற்றவர்கள். பேய் பிடித்தவர்கள் போல் அல்பமான மனிதர்கள் வந்து கூடும் இடமாக ஆகிறார்கள்.

**श्रूयमाणाः अपि प्रेतपटहाः इव उद्वेजयन्ति । चिन्त्यमानाः अपि महापातकाध्यवसायाः इव उपद्रवम् उपजनयन्ति । अनुदिवसम् आपूर्यमाणाः पापेन इव आध्मातमूर्तयः भवन्ति । तदवसथाः च व्यसनशतशरव्यतामब उपगताः वल्मीकतृणाग्रावस्थिताः जलबिन्दवः इव पतितम् अपि आत्मानं न अवगच्छन्ति ।**

அந்த அரசர்களின் பெயர்கள் காதில் பட்ட உடனேயே மரணத்தின் பொழுது வாசிக்கும் வாத்தியங்கள் போல் தூண்டுகின்றன. மனதில் நினைக்கப் பட்டவுடனே பெரும்பாதகச் செயல் செய்தது போல் உபத்திரவத்தை உண்டாக்குகிறார்கள். தினந்தோறும் பாவ செயல்களால் நிரப்பப்பட்டவர்கள் போல் ஆகிறார்கள். இந்நிலையில் நூற்றுக்கணக்கான கெட்ட செயல்களுக்கு லக்ஷ்யமாக ஆகிறார்கள். ஒரு வல்மீகத்தில் (புற்றில்) இருக்கும் புல்களின் முனையில் நிற்கும் நீர் துளிகள் எவ்வாறு அந்தப் புற்றில் விழுந்தால் காணாமல் போகின்றனவோ அவ்வாறு இந்த அரசர்களும் தன் நிலையிலிருந்து விழுந்தாலும் அவ்வீழ்ச்சியை அறிவதில்லை.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 30

## ஸ்ரீ அமலநாதர்

ஸ்ரீ வாசஸ்பதிமிஸ்ரரின் **பாமதி வியாக்யானத்திற்கு கல்பதரு** என்ற அற்புதமான விரிவுரை எழுதியவர் ஸ்ரீ அமலநாதர். வ்யாஸாஸ்ரமி என்றும் இவர் அழைக்கப்படுகிறார். **ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு சாஸ்த்ர தர்ப்பணம்** என்ற பெயரில் ஒரு ஸ்வதந்திரமான உரை எழுதியுள்ளார். ப்ரஹ்ம ஸூத்ரங்களின் உண்மைக் கருத்தை திருத்தமாகக் கூறி பெருமை பெற்றவர் இவர். இவரது **சாஸ்த்ர தர்ப்பணம்** ஒவ்வொரு அதிகரணத்திற்கும் தனித்தனியே உபன்யாஸம் போல் சொல்லப்பட்டுள்ளன. ஸ்ரீ பத்மபாதரின் பஞ்சபாதிகாவிற்கு **பஞ்சயாதிகா தர்ப்பணம்** என்றதொரு அரிய உரை எழுதியுள்ளார். ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி தனது அத்வைத ஸித்தியிலும் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் தனது **ஸித்தாந்த லேஸ ஸங்க்ரஹத்திலும்** இவரை எடுத்தாள்கின்றனர் என்பது இவரது ஆழ்ந்த ஞானத்திற்கும், ஸித்தாந்த புலமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இவரது கல்பதரு உரைக்கு ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் **பரிமளம்** என்று ஒரு உரை எழுதியுள்ளார். வேறு பல அறிஞர்களும் இவரது கல்பதரு வியாக்யானத்திற்கு உரை எழுதியுள்ளதாக அறியப்படுகிறது. ஸ்ரீ அமலநாதரின் கல்பதரு வியாக்யானத்திற்கு உரை எழுத வந்த ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அழகுற கூறுவார்.

பகவான் நாராயணனின் திருவடி தாமரைகளிலிருந்து புறப்பட்ட கங்கை எல்லா திக்குகளையும் பாவனமாக்கிக் கொண்டு பல திசைகளிலும் பாய்ந்து பற்பல பிரதேசங்களை அடைவது போல் ஸ்ரீ ஆச்சார்ய சங்கர பகவத் பாதரின் திருமுக மண்டலத்திலிருந்து புறப்பட்ட பிறவிப் பிணியறுக்கும் **ஸூத்யபாஷ்யமாகிற** ஞானகங்கை இரண்டற்ற ப்ரம்ஹ ஞானத்தை அனவரதமும் பெருக்கிக் கொண்டு கணகற்ற திசைகளில் பாய்ந்து பற்பல ஆசார்யர்களால் பாவனமாகும் நோக்கத்துடன் விரித்துரைக்கப்பட்டது.

ஸ்ரீ சங்கரின் ஸூத்ர பாஷ்யத்திற்கு ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்சரரால் எழுதப்பட்ட உரை **பாமதிப்ரஸ்த்தான**மென்று போற்றப்படுகிறது. **ப்ரகர்ஷேண ஸ்த்தீயதே நிர்ணீயதே அநேந இதி ப்ரஸ்த்தான** ஸூத்ர பாஷ்யத்தின் கருத்தை மிகச்சிறப்பான முறையில் நிர்ணயம் செய்து கூறுவதால் இது **ப்ரஸ்த்தானம்** என்று வழங்கப்பட்டது. இந்த நிர்ணயத்தை இன்னும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கும் பொருட்டே ஸ்ரீ அமலநாதர் கல்பதரு என்ற உரை எழுதினார். ஸ்ரீ அமலானந்தர் தனது கல்பதரு உரையை பூர்த்தி

செய்யுடமித்தில் தற்போது ‘தௌலதாபாத்’ என வழங்கப்படும் தேவகரி ராஜ்யத்தின் மன்னன் கிருஷ்ணன் அவரது ஸஹோதரரான மஹாதேவர் இவர்களது ஆதரவில் எழுதி வெளியிடப்படுகிறது என்று குறிப்பிடுகிறார். இவர்கள் ஆட்சிகாலம் கி.பி. 1247 - 1260. எனவே ஸ்ரீ அமலநாதர் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பது புலனாகிறது. கல்பதருவின் ஆரம்பத்தில் தன்னை ஸ்ரீ அனுபவானந்தரின் சீடராகக் கூறிக் கொள்கிறார். ஸ்ரீ ஆத்மானந்தயதி என்பவரை தனது பரமகுருவாகக் கூறுகிறார். ஸ்ரீ சித்ஸுகாசார்யரின் சீடரான ஸ்ரீ சுகப்ரகாசர் இவரது வித்யா குருவாக அறியப்படுகிறார். கோதாவரி நதியில் உற்பத்தி ஸ்தானமாகிய த்ரயம்பக க்ஷேத்திரத்தில் இவர் வாழ்ந்து வந்தார்.

(வளரும்)


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

VRNT e.mail :
office@vrnt.org <mailto : office@vrnt.org>
Phone : 044 - 24740549

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

1971 ஆம் ஆண்டு என்னுடைய தங்கை இரண்டாம் முறையாகக் கர்பமாக இருந்தாள். என் தந்தை இறந்து ஒரு வருடமே ஆகியிருந்தது. அப்போது சிவாஸ்தானத்தில் இருந்த பெரியவாளிடம் தங்கையின் ப்ரஸவம் நன்றாக ஆக வேண்டுமென்று விக்யாபனம் செய்து கொண்டேன்.



பிறகு மருத்துவர்கள் பரிசோதனை செய்த போது குழந்தையின் வளர்ச்சி போதுமானதாக இல்லை என்றும் மற்றும் தங்கையின் ரத்த ஓட்டம் சரியாக இல்லாததால் இரு ஜீவன்களில் ஒரு ஜீவன்தான் பிழைக்கும் என்று உறுதியாகக் கூறி விட்டனர். எனக்கோ அதிர்ச்சி. உடனே பெரியவாளிடம் ஓடிச் சென்று விஷயத்தைச் சொல்லி ஸுகப் ப்ரசவம் ஆக வேண்டினேன். உடனே கருணாமூர்த்தி கவலைப்படாதே என்று அபயக்கரம் காட்டினார். அவருடைய அருளால் அவளுக்கு சுகப் ப்ரசவம் ஆகிப் பையன் 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறான் என்பதை நினைத்து ஸ்ரீ சரணர்களின் பாத கமலங்களில் வணங்குகிறேன்.

ப்ரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்த ராம தீக்ஷிதர் சொல்லியது. காஞ்சீ மடத்தில் பெரியவா முகாமிட்டிருந்தார். கூட்டம் அதிகமாகவே இருந்தது. பெரியவா கரத்தால் தீர்த்தம் வாங்கிக் கொள்ள அனைவரும் ஆவலாயிருந்தனர். வரிசையாக மக்கள் தீர்த்தம் வாங்கி கொண்டிருந்தனர். இந்த இடம் தள்ளி ஒரு தனியான இடத்தில் ஒரு பெண் கண்ணீர் விட்டுக் கொண்டு நின்றிருந்தார். வெள்ளை வஸ்த்ரம் இல்லாவிடினும் பார்த்தால் விதவை போல் தெரிந்தது. நெற்றியில் குங்குமம், காலில் மெட்டி, கையில் வளையல் எதுவுமில்லை. அவளை பெரியவா பார்த்து விட்டார். அணுக்கத் தொண்டர் ஒருவரை அழைத்து அந்தப் பெண்மணியை அழைத்து வரச் சொன்னார். அவளோ மிகவும் தயங்கினாள். வற்புறுத்தலுக்குப் பின் பெரியவாளிடம் வந்தாள்.

அபயக் கரம் கொடுத்த பெரியவா அவளுக்கு நிறைய குங்குமமும், வளையல்களையும் தந்து ஆசீர்வதித்தார். அவளுக்கோ ஆச்சர்யம். அமங்கலியான தனக்கு ஏன் இப்படி உபசாரம் என்று. அருகில் இருந்தவர்களிடம் தன் கணவர் போரில் இறந்து விட்டதாகச் செய்தி வந்தது. மன உளைச்சல் தாங்க முடியாமல் பெரியவாளைத் தர்சனம் செய்ய வந்ததாகவும் இங்கு நடந்ததைப் பார்த்தால் எதுவும் புரியவில்லை என்று கூறி அழுதாள். பல மாதங்கள் கழிந்தன. அதே பெண் ஸுமங்கலி கோலத்துடன் தன் கணவருடன் பெரியவாளைத் தர்சிக்க வந்தாள். ஆனந்தக் கண்ணீருடன் பெரியவாளை நமஸ்கரித்த பின் பெரியவாளிடம் தவறான தகவலால் தன் கணவர் இறந்து விட்டதாகத் தகவல் வந்ததாகவும் முன் பெரியவாளைத் தர்சனம் செய்த பின் ஊருக்குப் போனதாகவும் அங்கு கணவன் உயிருடன் இருப்பதாக, தகவல் வந்ததாகவும் பெரியவா குங்குமம் கொடுத்ததின் பொருள் அப்புறம் விளங்கியது என்றும் கூறினாள். பெரியவா புன் சிரிப்புடன் அவளை மீண்டும் ஆசீர்வதித்தார். இப்போதும் அவள் தன் குடும்பத்துடன் தவறாமல் ஸ்ரீ மடம் வருகிறாள்.

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 18. ஆரோக்கியத்திற்கு மூன்று வழிகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் தேவையானது. ஆரோக்கியமே ஆரோக்கியம் இல்லாவிட்டால் நிம்மதியோ, சுகமோ இருப்பதில்லை. இதையே நம் முன்னோர்கள் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று கூறினர். ஆங்கிலத்திலும் இதையே 'Health is Wealth' என்பர்.

நாம் எல்லோரும் மிகவும் ஆசைப்படுவதும் ஆனால் எளிதில் யாருக்கும் கிடைக்காத சௌபாக்கியம் ஆரோக்கியம் தான். இன்று ஒவ்வொரு மனிதனும் தன் வருமானத்தில் முப்பது சதவிகிதம் மருந்து மாத்திரைகளுக்குச் செலவழிப்பது மிகவும் சாதாரணம் ஆகி விட்டது. இந்த நிலை நீடித்தால் நம் வருங்கால சந்ததிகள் கதி தான் என்ன? மிகவும் பரிதாபமானதே! வருங்காலத்தில் உண்ணும் உணவை விட மருந்து மாத்திரைகளே அதிகமாகலாம். இது ஒரு நல்ல அறிகுறி அல்ல. இது நாகரீக வாழ்வின் தலைவிதி !

ஆரோக்கியத்திற்காக நம் மகரிஷிகள் செய்துள்ள உபதேசங்கள் என்ன? ஆரோக்கிய ப்ராப்திக்கு ஸ்ரீ கிருஷ்ணர் கூறும் மூன்று உபதேசங்களைப் பார்ப்போம். (கீதை 6-17)

**யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு ।**
**யுக்தஸ்வப்னாவபோதஸ்யை யோகோ பவதி துக்கஹா ॥**

1. தனக்கு தேவையான அளவு சாத்வீகமான ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும். குறைவாகவோ, அதிகமாகவோ உண்ணக் கூடாது.

2. தினமும் அளவான உடற்பயிற்சி, பிராணாயாமம், யோகாசனங்கள் தவறாமல் செய்ய வேண்டும். சக்திக்கு மீறி உடலை வருத்த வேண்டாம்.

3. தினமும் ஆறு மணி நேரமாவது நித்திரை செய்ய வேண்டும். இரவில் தூங்காமல் உழைப்பவர்களுக்கு ஆரோக்கியம் கெட்டு விடும்.

இந்த மூன்று வழிமுறைகளை அனுசரித்து ஆரோக்கியம் உள்ளவர்களாக வாழ்வோம்.

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த **ஸ்ரீ மூக கவியி**னால் இயற்றப்பட்ட **மூக பஞ்சசதியை** எல்லாரும் அறிவர்.
காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது **மூக பஞ்சசதி.**
அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை **'மூக ஸாரம்'** என்னும் தலைப்பில் மறைந்த **ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாஸன்** தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**सति जगदम्बिके हरकुटुम्बिनि वक्त्ररुचा**
**जितशरदम्बुजे घनविडम्बिनि केशरुचा।**
**परमवलम्बनं भव समादृतकाञ्चिपुरे**
**मम गतसंविदो जडिमडम्बरताण्डविनः ।। ९७ ।।**

ஸதி ஜகதம்பகே ஹர குடும்பனி வக்த்ரருசா
ஜித ஶரதம்புஜே கன விடம்பனி கேஶருசா।
பரமவலம்பனம் பவ ஸமாத்ருத காஞ்சிபுரே
மம கத ஸம்விதோ ஜடிமடம்பர தாண்டவிந:।।97।।

*(ஸ்துதி சதகம் 97)*

*ஜகதாம்பிகையும் ஹர பத்நியும் சரத்கால தாமரை போன்ற முகமுள்ளவளும், மேகங்களுக்கு ஸமமான கூந்தலை தரிப்பவளும், காஞ்சீ வாஸினியுமான ஏ! ஸதி தேவியே! ஞானத்தை இழந்து அக்ஞான ஆர்ப்பாட்டத்தால் கூத்தாடுகிற எனக்கு நீ பரம ஆதாரமாயிருந்து காப்பாயாக.*